பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 06 சனிக்கிழமை (20.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 206

# குடாநாட்டின் கடற்பிரதேசத்தில் மீன்பிடித் தடைகள் உடன் நீக்கம்

## கடற்றொழிலாளருக்கான வசதிகளுக்கு 303 மில்லியன் ரூபா ஒதுக்கீடு



யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடற்பிரதேசங்களில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் யாவும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடக்கு மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்குமான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான பஸில் ராஜபக்ஷ இதனைக் காரைநகரில் நடைபெற்ற 'வடக்கின் வசந்தம்' கூட்டத்தில் அறிவித்தார்.

குடாநாட்டின் கடற்றொழில் மேம்பாட்டுக்கும் மீனவர்களுக்கான வசதிகளைச் செய்வதற்கும் மொத்தம் 303 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் அங்கு தெரிவித்தார்.

★ *24 மணி நேரமும் கடற்றொழில் செய்ய அனுமதி* ★ ஆழ்கடல் மீன் பிடிக்கும், வெளியிணைப்பு இயந்திர மீன்பிடிக்கும் அனுமதி ★ *15 இயந்திர வலுகொண்ட வெளியிணைப்பு இயந்திரத்தைப் பயன்படுத்த அனுமதி* ★ மீன் கள்ஞ்சியங்கள், கடற்கரைகளில் கடற்றொழிலாளர் விடுதிகள் அமைத்தல் என்பன நேற்றைய கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட பிரதான அம்சங்களாகும்.

வடக்கின் கடற்பரப்பில் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த கடற்றொழிலுக்கான சகல தடைகளும் முல்லைத்தீவிலிருந்து நாச்சிக்குடா வரைக்கும் மன்னார் கடல் பகுதி வரைக்கும் உடனடியாக நீக்கப்பட்டுள்ளதாகவும் பஸில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்றொழிலாளர் இன்று முதல் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளின் விவரம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

குடாநாட்டில் கடற்றொழிலில் ஈடுபடுவோர் இன்று 20ஆம் திகதி முதல் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்த விவரங்களை சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சு நேற்று வெளியிட்டது.

அந்த நடைமுறைகள் வருமாறு:-

* குடாநாட்டில் 24 மணிநேரமும் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதி இன்று முதல் வழங்கப்படுகின்றது.
* தற்போது நடைமுறையில் உள்ளவாறு கடற்றொழிலாளர்கள் கடற்படை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 24 மணி நேர மின்விநியோகம் ஆரம்பம் அமைச்சர் செனவிரத்ன தொடக்கி வைத்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 20

குடாநாட்டு மின்பாவனையாளர்களுக்கு நாள் முழுவதும் 24 மணிநேரமும் மின்சாரம் வழங்கும் நிகழ்வை மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் ஜோன் செனவிரத்தினா நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

சுன்னாகம் மின்சார நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கின் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்குமான ஜனாதிபதி செயலணியின்தலைவரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுக்கான 'பாஸ்' நடைமுறை நீக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

நெடுந்தீவுப் போக்குவரத்திற்கான 'பாஸ்' நடைமுறையை நீக்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் உதிரிப்பாகங்கள், மின் உபகரணங்கள் 32 லொறிகளில்

### ஏ-9 வீதியூடாக நேற்று எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 20

கொழும்பில் இருந்து தனியார் வர்த்தகர்கள் மற்றும் பிரபல நிறுவனங்களின் பொருள்களுடன் 32 லொறிகள் நேற்று மாலை நாவற்குளி களஞ்சியத்தை வந்தடைந்தன. இந்த வாகனங்களுடன் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் இரண்டு பவுஸர்களில் எரிபொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் 40 இராணுவ முகாம்கள் அமைக்க அரசு துரித நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 20

வடக்கு, கிழக்கில் சுமார் 40 இராணுவ முகாம்கள் அமைக்கப்படவுள்ளன என அரச தகவல்கள் தெரிவித்தன என இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டெடுக்கப்பட்ட பிரதேசங்களைப் பாதுகாத்தல் மற்றும் சட்ட ஒழுங்கை நிலை நாட்டுதல் போன்ற (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் அது குறித்த அறிவிப்பு இவ்வருட இறுதிக்கு முன்பாக

கொழும்பு, ஜூன் 20

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை இந்த வருட இறுதிக்கு முன்னர் வெளியிட்டு, அடுத்த ஆண்டு முற்பகுதியில் அந்தத் தேர்தலை நடத்தி முடிப்பதற்கு ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ முடிவு செய்திருக்கின்றார் என அரசின் உயர்பீடத் துடன் தொடர்புடைய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

அதன் பின்பே - அடுத்த ஆண்டின் முற்பகுதியில் - பொதுத் தேர்தலை நடத்துவதற்கும் அவர் எண்ணம் கொண்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

2005 நவம்பர் பிற்பகுதியில் தமது முதலா

(15 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் 12பேர் கைது

கொழும்பு, ஜூன் 20

வெள்ளவத்தைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது தமிழர்கள் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தேடுதல் நடவடிக்கையை நேற்று

(16 ஆம் பக்கம் பார்க்க)




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோதுமை மா, சீனி விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள கோதுமை மா, சீனி என்பவற்றை ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அரச அதிபர் க.கணேஸ் அறிவித்துள்ளார்.

ஒரு கிலோ மாவின் விலை 72 ரூபாவாகவும், ஒரு கிலோ சீனியின் விலை 87 ரூபாவாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும் - இப்பொருள்களை மொத்தமாக விற்பனை செய்வதற்கு அனுமதியில்லை என்றும் - தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

பொருள்களுக்கான வழங்கற் கட்டளைகளை பெற்றுக்கொள்ளாத ப.நோ.கூ சங்கங்களை இன்று மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (6)


## லண்டனில் உயர்கல்வி பயில்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள (லண்டன்) உள் துறை அலுவலகத்தால் 'A' தரத்தில் பட்டியலிடப்பட்ட தலைசிறந்த, நீண்டகால வரலாற்றையுடைய பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் விரும்பிய கற்கைநெறிகளுக்கு அனுமதி.

குறைந்த கட்டணச்சலுகைகள், விமான நிலைய அழைப்பு ஏற்பாடுகள், தங்குமிட வசதி ஏற்பாடுகள், பகுதிநேர வேலைக்கான ஆலோசனைகள் என்பனவும் வழங்கப்படும்.

நாளை (21.06.2009) ஞாயிற்றுக்கிழமை (ஒவ்வொரு ஞாயிறும்) காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை நேரில் சந்திக்கலாம். ஏற்கனவே சந்தித்தவர்கள் தங்களிடம் கோரப்பட்ட விவரங்களுடன் நாளை (ஞாயிற்றுக்கிழமை) வரவும்.

உடன் தொடர்புகளுக்கு :-
தொ.பே.0212223818,
எந்த நேரமும் தொடர்புகொள்ள 0774528818
E.Mail : mg 1404_2009@ yahoo.com

148, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். ( யுனிசெவ் முன்பாக)


## மரண அறிவித்தல்

### திருமதி விசாலாட்சி செல்லத்துரை



பெருந்தெரு, புலோலி தெற்கைச் சேர்ந்த விசாலாட்சி செல்லத்துரை (ஆச்சி) 19.06.2009 இல் காலமானார்.

அன்னார் இராமலிங்கம் செல்லத்துரையின் (தம்பு-இளைப்பாறிய இ.போ.ச. சாரதி) அன்பு மனைவியும் செல்வேந்திரன் (முகாரி, இ.போ.ச., கோண்டாவில்), செல்வராணி (வவனிக்குளம்), செல்வநாதன், செல்வரஜனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுமதி (இளைப்பாறிய தாதி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), குணலிங்கம், செல்வராணி, சுதாகரன் (சுதா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2009) பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெருந்தெரு,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல்: செல்வேந்திரன்,
செல்வநாதன் (மகன்மார்).

## 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18★06★1949

மறைவு
28★06★1992

### அமரர் மாசிலாமணி தேவநேரு

ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள் நினைவு மட்டும் எங்கள் மனதை விட்டு அகலவில்லை.

செட்டிவளவு லேன்,
இணுவில் மேற்கு, இணுவில்.

மனைவி,
பிள்ளைகள்.

## கவிதைத் தொகுதி வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 20

நெடுந்தீவு முகிலனின் மூன்றாவது கவிதைத் தொகுப்பாகிய 'கிறுக்கி' நாளை வெளியிடப்படவுள்ளது.

அருட்தந்தை அமிர்தநாதர் இயூஜின் அமல்ராஜின் குருப்பட்ட முதல் திருப்பலி, நெடுந்தீவு புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. அந் நிகழ்வில் அவரது நினைவாக இந்தக்கவிதைத் தொகுதி வெளியிடப்படவுள்ளது. (1-203)

## மீசாலையில் விபத்து: வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

மீசாலை, அரசடிப் பகுதியில் நேற்று முன்தினம் மு.ப. 10.30 மணிக்கு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காததால் யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த கந்தன் கணபதி (வயது 82) என்ற வயோதிபரே மரணமானவராவார். சைக்கிளில் சென்ற பிரஸ்தாப வயோதிபரை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மோதிவிட்டு தப்பி ஓடிவிட்டனர் என்று சொல்லப்பட்டது.

படுகாயமடைந்த நிலையில் அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதானா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று மரணமானார்.

இச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்ததை அடுத்து நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு அவர் உத்தரவிட்டார். (1-204-207)


## புறொயிலர் மலிவு விற்பனை

மலிவு விலையில் தினமும் உடனுக்குடன் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். புறொயிலர் குஞ்சு பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**A.T.S. FARM,** K.K.S. வீதி, தாவடி.

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

நிறை கூடிய, தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**செம்மணி பாம்,**
77/3, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

மொடல் நம். 21 MD 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
T.P.No. 0774735491, 0771371654


## சங்கானை சிவப்பிரகாசவில் நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

சங்கானை, ஜூன் 20

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் ச.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வலிகாமக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் அவரது பாரியார் கலைவாணியும் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு கலந்து கொள்வார். நிறுவுனர் நினைவுப் பேருரையை யாழ். மாவட்ட செயலகத் திட்டமிடல் பிரிவு அபிவிருத்தி உதவியாளர் பா. ஸ்ரீபவன் நிகழ்த்துவார். [illegible]


## கட்டடம் உடன்தேவை

யாழ்.நகர் மத்தியிலிருந்து 3 கிலோ மீற்றருக்குள் 1000 சதுர அடிக்கு மேற்பட்ட, குறைந்தது மூன்று வாகனங்கள் தரித்து நிற்கக் கூடிய இடவசதியுள்ள, சுற்றுமதிலுடன் கூடிய வீடு/ கட்டடம் பிரபல நிறுவனமொன்றுக்கு உடன்தேவை.

தொடர்புகளுக்கு: 0777389696


## மரண அறிவித்தல்கள்

### திருமதி வல்லிபுரம் தில்லைமுத்து

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வல்லிபுரம் தில்லைமுத்து கடந்த (16.06.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்கள் செல்லப்பா - தங்கம்மா தம்பதியினரின் புதல்வியும் அமரர் நல்லதம்பி வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் விஜயலட்சுமி, பாக்கியலட்சுமி, நல்லதம்பி, Dr.முத்துக்குமாரசாமி ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் சிதம்பரநாதன், தவேந்திரன் (காந்தி), சிவகுமாரி, ஆனந்தகௌரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கும்பிழாவளை மேற்கில் அமைந்துள்ள புறாக்கூட்டுவளவு இல்லத்தில் நாளை (21.06.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி வடக்கு, கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கும்பிழாவளை மேற்கு,
அளவெட்டி மத்தி.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சிவலிங்கம் அருளம்மா



கைதடி வடக்கு, நவபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் அருளம்மா (ராசா) நேற்று (19.06.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சின்னம்மா தம்பதியினரின் மூத்த புதல்வியும், புரட்சிதாசன் (லண்டன்), சிவாஜினி, தபோஜினி(கனடா), சிவதாசன் (லண்டன்), பிறேம தாசன்(லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், சுதாஜினி (லண்டன்), சிவராசா, முருகதாஸ் (கனடா), சுஜீவா (லண்டன்), அனித்தா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மதுமிலா, மயூரிகா, யதுர்சன் (கனடா), சுகானி(கனடா), அர்வின் (கனடா), அரிஷ் (லண்டன்), கனிகா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2009) சனிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி, ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவபுரம், கைதடி.
0778716354

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பரமேஸ்வரி கனகரெத்தினம்



மண்டைதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நாமகள் லேன், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கனகரெத்தினம் நேற்று (19.06.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரெத்தினத்தின் அன்புத்துணைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - யோகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆரூரபிள்ளை - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் கணேஸ் (ராசா), ஸ்ரீரங்கன், சிவசிறி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமிர்தவதனி, சித்திரா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் புஸ்பலதா, விஜயலெட்சுமி, அரங்கநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரேணுகா - திபாகர் (லண்டன்), விஜிகரன், நேகா, லக்சிகா (லண்டன்), சிரஞ்சிகா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் உமாபதி, கனகலிங்கம், காலஞ்சென்றவர்களான சேதுராசா, நாகம்மா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2009) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாமகள் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
க.கணேஸ் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வன்னி முகாம் மக்களுக்கு நீதி தாமதிக்காமல் கிட்டுமா?

வடக்கில் பல லட்சம் தமிழ் அகதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நலன்புரி மையங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் விஜயம் செய்து பார்வையிடுவதற்கான உரிமையை ஏற்றுக் கொள்ளுமாறு அரசுத் தரப்புக்கு ஆலோசனை கூறியிருக்கின்றார் புதிய நீதியரசர் அசோக என்.டி.சில்வா.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலித்த சமயமே பிரதம நீதியரசரைக் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் இந்த உத்தரவை அரசுக்கு விடுத்திருக்கின்றது.

கடந்த மாத முற்பகுதியில் வன்னி யுத்தம் தீர்க்கமான- இறுதி - கட்டத்தை அடைந்த சமயம் அங்கு சிக்குண்டிருந்த சுமார் மூன்று லட்சம் தமிழ் அகதிகள் இப்போது அங்கிருந்து விடுவிக்கப்பட்டு, வவுனியாவை அண்டியுள்ள பிரதேசங்களில் 'நலன்புரி மையங்கள்' என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஒரு வகையில் பார்த்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

முகாம்களை விட்டு வெளியே வரவோ அல்லது நெருங்கிய உறவினர்களை கூடப் போய் சந்திக்கவோ அனுமதி இல்லாத திறந்த வெளிச் சிறையில் அவர்கள் வாடுகின்றார்கள்.

அவர்களுக்கான அடிப்படை வசதிகள், மனித நேயத் தேவைகள் போன்றவை நிறைவு செய்யப்படுகின்ற நிலைமை மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் அவலங்கள் தொடர்பாக வெளியாகும் செய்திகள் அவர்கள் 'சட்டியில் இருந்து அடுப்புக்குள் விழுந்த மாதிரியான' நிலையில் இருக்கின்றார்கள் என்ற எண்ணத்தையே ஏற்படுத்துகின்றன.

ஆக, அரசுத் தலைமை விரும்புகின்ற - அல்லது அவர்களின் விருப்பத்திற்கு இசைவான - தரப்பினர் மட்டுமே இந்த தடுப்பு முகாம்களை அல்லது நலன்புரி (?) மையங்களை நேரில் சென்று பார்க்க முடியும் என்ற கடுங்கட்டுப்பாடு, அந்த மையங்களில் அரங்கேறும் மனிதப்பேரவல நெருக்கடிகள் குறித்து வெளியே கசியும் தகவல்களை ஊர்ஜிதப்படுத்துவது போல இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த பின்புலத்திலேயே அந்த முகாம்களுக்கு நேரில் சென்று, நிலைமைகளைக் கண்டறிந்து, நாட்டுக்கும், மக்களுக்கும், நாடாளுமன்றம் மூலம் உண்மையை எடுத்துக் கூறுவதற்கு தங்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்ற முறைப்பாட்டை எதிர்க்கட்சி எம்.பிக்கள் நீதிமன்றத்திடம் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல், அந்த முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்லாயிரக் கணக்கான அகதிகளின் நடமாட்ட சுதந்திரம் வல்வந்தமான முறையில் முடக்கி வைக்கப்பட்டுள்ளமையை ஆட்சேபித்தும் உயர்நீதிமன்றத்தில் பிறிதொரு அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த மனுவை மாற்றுக்கொள்கைகளுக்கான மையம், மேற்படி அகதி மக்களின் சார்பில் தாக்கல் செய்திருக்கின்றது.

இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் நீதிக்கு முன் சமத்துவமாக நடத்தப்படல், சமத்துவமான பாதுகாப்பு அளித்தல், சட்டவிரோதக் கைது மற்றும் தடுத்து வைப்புக்கு உள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரம், தாம் சார்ந்த துறையில் தொழிலில் ஈடுபடுவதற்கான சுதந்திரம், நடமாடுவதற்கான சுதந்திரம், இலங்கையில் தான் வசிக்கும் இடத்தைத் தெரிவு செய்வதற்கான சுதந்திரம் ஆகிய அடிப்படை உரிமைகள் உண்டு. இந்தப் பிரதான உரிமைகளை இலங்கையின் அரசமைப்பு விசேடமாக விதந்துரைப்பதோடு இந்த உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதும் - நிலைநாட்டுவதும் அரசின் தலையாய கடமை என்றும் வற்புறுத்துகின்றது.

ஆனால், இந்த அடிப்படை உரிமைகள் எல்லாம் மேற்படி அகதி முகாம் மக்கள் தொடர்பில் முழு அளவில் அரசினாலேயே - அரசுப் படைகளின் கடுங்கோட்பாட்டு ஒழுங்கு விதிகளினாலேயே- மீறப்படுகின்றன என்று மேற்படி அடிப்படை உரிமை மீறல் மனுவில் உயர்நீதிமன்றத்திடம் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது.

இம்மாத முற்பகுதியில் ஓய்வுபெற்ற முன்னாள் பிரதம நீதியரசர் சரத்.என்.சில்வா, மேற்படி வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளின் பரிதாப நிலைமை குறித்து கடும் கவலையும் விசனமும் தெரிவித்ததோடு, இலங்கையின் நீதியும், சட்டமும் இந்த மக்களுக்கு உரிய வகையில் கிட்டவில்லை என்று ஆதங்கமும் தெரிவித்திருந்தார்.

இப்போது அதற்கான வாய்ப்பை - அந்த மக்களுக்கு இலங்கை நீதித்துறை நீதியும், நியாயமும் வழங்கும் சந்தர்ப்பத்தை - மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் தனது மனு மூலம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது.

அந்த மக்களுக்கு நீதி உரிய வேளையில் - காலம் பிந்தாமல் - விரைந்து கிடைக்க வேண்டும். 'நீதி தாமதித்தால் நீதி பிழைத்து விடும்' என்ற ஒரு கூற்று நீதித்துறையில் உண்டு.

யாழ்.குடாநாட்டில் வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில், உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பல்லாயிரம் ஏக்கர் காணி அரச படைகளினால் சுவீகரிக்கப்பட்டது. இதனால் பல்லாயிரம் குடும்பங்கள் சந்ததி சந்ததியாக தாங்கள் வாழ்ந்த தாயக மண்ணிலிருந்து - வீடு, வாசல்கள், நிலபுலன்கள், உடைமைகள், தோட்டங்கள், வயல்கள், பண்ணைகள் போன்றவற்றை துறந்து - விரட்டப்பட்டன. அவர்கள் தொடர்பில் இதே உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக - உரிய பலனோ, நியாயமோ பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிட்டாத நிலையில் - இழுபடுகின்றன.

அது போன்று இல்லாமல், நடமாட்டங்கள் முடக்கப்பட்டு, சிறைவாழ்வு போன்ற தடுப்புமுகாம் வாழ்வில் சிக்கியிருக்கும் இந்த மக்களுக்கு விரைந்து - உரிய காலத்துக்குள் - நீதியும், நியாயமும் கிட்டவேண்டும்.

இது ஓரிருவர் சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல. சுமார் மூன்று லட்சம் மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சினை சம்பந்தப்பட்டது. ஆகவே அவர்களுக்கு நீதி கிட்ட வேண்டும். அதுவும் நீதி, நியாயமான காலத்துக்குள் கிட்ட வேண்டும். இலங்கை நீதித்துறை அதை உறுதிப்படுத்துமா?

# சேவைக்கு உகந்ததென உறுதிப்படுத்தப்படும் படகுகளே நயினாதீவுக்கான போக்குவரத்தில் ஈடுபட அனுமதிக்கப்படும்

## யாழ்.செயலகக் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானம்

நயினை.ஜூன் 20

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் உற்சவத்தின்போது சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ள படகுகள் பயணிகள் சேவைக்கு உகந்தது என உறுதிப்படுத்தப்படும் பட்சத்திலேயே சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படும் என அப்பிரதேசத்துக்கான கடற்படை அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன் படகுகளில் குறிப்பிட்ட தொகைப் பயணிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள், எனவும் அவர் கூறினார்.

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவம் தொடர்பாக நேற்று யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபிணி வரதலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அவை வருமாறு:

*குறிகாட்டுவானில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான கடைசி பஸ் மாலை 5.30 மணிக்குப் புறப்படும். யாழ்ப்பாணத்தில் இருந்து ஏனைய பகுதிகளுக்குச் செல்லும் யாத்திரிகர்களுக்கான பஸ்சேவைகள் குறித்தும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

*சுத்தமான குடிதண்ணீரை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் இருந்து நயினாதீவு வரை தேவையான இடங்களில் நீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும். யாழ்.மாநகரசபையினர், வேலணை பிரதேச சபையின் நீர் வடிகாலமைப்புச் சபையினர் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய அறங்காவலர் சபையினர் ஆகியோர் இணைந்து இது குறித்த ஏற்பாடுகளைக் கவனிப்பார்கள்.

*மின்சார விநியோகத்தைச் சீர்செய்யவும் வர்த்தக நிலையங்கள் தவிர்ந்த கோயில் சுற்றாடல் பகுதிகளில் மின் விநியோகத்தை தேவையான நேரம் வரை செயற்படுத்தவும் தேவையேற்படின் மேலதிக மின்னியந்திரங்களைப் பயன்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

*உணவு, மலசலகூடம், சுகாதார வசதிகள் முழுமையாகக் கவனிக்கப்படும். மலசல கூடத்தை சுத்தமாக வைத்திருக்கவும் உரிய தொழிலாளர்கள் தயாராக வைக்கப்படுவார்கள். சுகாதாரப் பரிசோதகர்கள் சுத்தமான குடிதண்ணீர், உணவு, மலசலகூடம், சுகாதரம் பற்றி தொடர்ச்சியாக கண்காணிப்பார்கள்.

*பண்ணை சோதனைச் சாவடியில் சோதனைகள் இடம்பெற்று அல்லைப்பிட்டியில் கூடுதலான கடற்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு சோதனைகளைத் துரிதமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். குடும்பமாகப் பயணிப்பவர்கள் தங்களது பெயர், அடையாள அட்டை இலக்கம் போன்ற விவரங்களை தம்முடன் எடுத்து வந்துசோதனைகளை இலகுவாக்க உதவுமாறுகேட்கப்படுகின்றனர்.

*புங்குடுதீவு மடத்து வெளியில் பயணிகள் இறக்கப்படமாட்டார்கள். குறிக்காட்டுவானில் விசேட பாஸ் வழங்கப்பட்டு நயினாதீவுக்கு அடியார்கள் செல்லக் கூடியதாக நடவடிக்கை எடுக்கப்படும்.

*உயிர் காப்பு அங்கிகள் அணிவது முக்கியமாக்கப்பட்டுள்ளது. கடற்படையினரும் உயிர்காப்பு அங்கிகளை வழங்கவுள்ளனர்.

*நயினாதீவுக்கு மாலை 5 மணி வரை படகுச்சேவை நடைபெறும்.

*பிரயாண சேவை ஏனைய அவசிய தேவைகள் குறித்து வேலணைப் பிரதேச செயலர், அரசாங்க அதிபருடன் தொடர்புகொண்டு நிலைமைகளை சீராக்க நடவடிக்கை எடுப்பார்.

கூட்டத்தில் வேலணைப் பிரதேச செயலர், வேலணைப் பிரதேச சபைச் செயலாளர், நயினை அம்பாள் ஆலய அறங்காவலர் சபையினர், கடற்படை அதிகாரிகள், பொலிஸார் உட்பட பலர் கலந்துகொண்டனர். (50-111)

# நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச் சேவை கடல்வற்றுக் காரணமாகத் தாமதம்

நெடுந்தீவு,ஜூன் 20

நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச் சேவை கடல்வற்றுக் காரணமாக காலதாமதமாகவே சேவையை ஆரம்பிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தால் நெடுந்தீவுத் துறைமுகப் பகுதியில் கடல் நீர்வற்று அதிகரித்துக் காணப்படுகின்றது. இதன்காரணமாகக் குமுதினிப்படகு தரை தட்டியவாறு நிற்கின்றது.

இதனால் காலை 7 மணிக்குப் புறப்பட வேண்டிய குமுதினி பயணிகளுடன் கடலில் மிதக்க முடியாத நிலையில் உள்ளது.

இதனால் கடல் நீர் மட்டம் அதிகரித்த பின்னரே இச் சேவையை ஆரம்பிக்க வேண்டிய நிலை உள்ளதாகவும் இதனால் தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(203-111)

# பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வு காணப்படாவிட்டால் இலங்கையில் மீண்டும் வன்முறைகள் எழும் அபாயம்

## எச்சரிக்கிறார் ஐ.நா.செயலர் பான் கீ மூன்

ஜெனிவா, ஜூன் 20

இலங்கையில் நீண்டகாலமாக நிலவிய யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும்,ஏனைய முக்கிய பிரச்சினைகளுக்கு சரியான வழியில் தீர்வு காணப்படாவிட்டால் மீண்டும் வன்முறைகள் எழும் அபாயம் நிலவுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்துள்ள போதிலும், தீர்வு காணப்பட வேண்டிய பல பிரச்சினைகள் எஞ்சியிருப்பதாகத் தாம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு சுட்டிக்காட்டியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இடம்பெயர்ந்தோர் முகாம்களில் மக்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் மக்களை மீளக் குடியமர்த்த அரசாங்கம் காட்டி வரும் அக்கறை வரவேற்கத் தக்கதென அவர் குறிப்பிட்டுள்ளார்.தாம் அண்மையில் முகாம்களுக்கு விஜயம் செய்திருந்த போது நிலமைகளை நேரில் அவதானித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மனிதாபிமானப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வரும் மக்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு தொடர்ந்தும் கவனம் செலுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (50)

# 'வடக்கின் வசந்தம்' வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் 4 ஆயிரத்து 270 வீடுகள்

யாழ்ப்பாணம் ஜூன் 20

'வடக்கின் வசந்தம்' அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் 4 ஆயிரத்து 270 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

உலகவங்கியின்நிதி உதவியுடனான வடக்கு-கிழக்கு மீள் நிர்மாண வீடமைப்புத் திட்டத்தின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'வடக்கின் வசந்தம்' அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வடமாகாணத்தில் 4 ஆயிரத்து 270 வீடுகள் அமைப்பதற்கு ஆயிரத்து 452 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வீடமைப்புத் திட்டத்தினை உலக வங்கியின் வடக்கு- கிழக்கு மீள் நிர்மாண திட்டத்தின் ஊடாக மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்குரிய பயனாளிகளைத் தெரிவுசெய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. பயனாளிகள் தெரிவு முடிவடைந்ததும் வீடமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவில் இந்த வீடமைப்புப் பணிகள் நடைபெறவுள்ளன. இத்திட்டம் 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை நடைமுறைப்படுத்தவுள்ளன.

'வடக்கின் வசந்தம்' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வீடமைப்புப் பணிகள் பெரும்பாலும் மூன்று மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படும் என்றார் அவர்.

(50- 9)

# யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் வரை பாடசாலை பஸ்சேவையை நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் வரையிலான பாடசாலை சேவையினை மீண்டும் ஆரம்பிக்குமாறு தென்மராட்சி மேற்குப் பிரதேச மாணவர்கள் யாழ். சாலை முகாமையாளரைக் கோரியுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் சாவகச்சேரி நகரப்பகுதிக் கல்லூரிகளில் கல்வி கற்கின்றனர். காலை வேளையில் பாடசாலை சேவை நடத்தப்படாமையினால் மாணவர்கள் உரிய நேரத்திற்கு பாடசாலைக்கு சமுகமளிக்க முடியாமல் சிரமமடைகின்றனர்.

முன்னர் செம்மணி ஊடாக நடத்தப்பட்ட 811 வழி பஸ் சேவை தற்போது கோப்பாய்- கைதடி ஊடாக காலை 7 மணிக்கு முன்னரே ஈடுபடுகின்றது.

நாவற்குழிப் பகுதி மாணவர்களும் கைதடி வடக்குப் பகுதியில் இருந்து வரும் மாணவர்களும் 811 வழி பஸ் சேவையினை பயன்படுத்த முடியாமல் உள்ளது.

அதன் பின்னர் காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் பஸ் பொதுமக்கள் அரச உத்தி யோகத்தர்கள் பெருமளவில் பயணிப்பதால் பெரும் இடநெருக்கடி ஏற்படுகிறது. இதனால் கைதடி சந்தியில் இருந்து நுணாவில் சந்தி வரையுள்ள பகுதி மாணவர்கள் பஸ்களில் ஏறமுடியாத நிலை காணப்படுகிறது.

இதனால் பாடசாலைப் பஸ் சேவையினை காலை வேளையில் நடத்த ஏற்பாடு செய்யுமாறு கடிதம் மூலம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(203-207)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 07 | 21.06.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | சதுர்த்தசி |
| | பி.இ. 04.31வரை |
| நட்சத்திரம்: | ரோகிணி |
| | பி.ப.02.27 வரை |
| சுபநேரம்: | 08.54 - 10.24 |
| ராகுகாலம்: | 04.24 - 05.54 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவினர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையால் முகாம்களில் உள்ள மக்கள் மன அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளனர்

## செடெக் - கரித்தாஸ் அமைப்புத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

இடம்பெயர்ந்து முகாம்களில் உள்ள மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக, செடெக்-கரித்தாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. இடம்பெயர்ந்தவர்கள் அனைவரும் அவர்களது உறவினர்களிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் அவர்கள் பல்வேறு மன அழுத் தங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

நேற்று இடம்பெற்ற கத்தோலிக்க ஆயர்களின் கூட்டத்தின் பின்னர் நடத் திய செய்தியாளர் சந்திப்பின்போது, அதன் தேசிய பணிப்பாளர் அருட்தந்தை டேமியன் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 32,000 குடும்பங்கள் முகாம்களில் இருந்த நிலையில், இறுதி யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக அவர்களுக்கான தேவைகளை வசதிப்படுத்த முடியாதிருப்தாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இடம்பெயர்ந்த அனைவரும் அவர்களின் நெருங்கிய உறவினர்களிடம் இருந்து தனிமைப்படுத் தப்பட்டுள்ளதால், அவர்கள் பல்வேறு மன அழுத்தங்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் பிளவு பட்டு சிதறடிக்கபட்டுள்ள குடும்பங்களை ஒன்றிணைக்கும் வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கிடையில் இது தொடர்பில் ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கிய உயர் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளதாகவும், அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அவர்கள் உறுதியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (50)

# காத்திருப்போர் பட்டியலில் இருந்து 32 பேர் யாழ்.கல்வியியற் கல்லூரிக்கு தெரிவாகினர்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு காத்திருப்போர் பட்டியலில் இருந்து 32 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் இத் தகவலைத் தெரிவித்தார்.

தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிக்கு வந்து படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

தெரிவானோர் விவரம் வருமாறு:-

**ஆரம்பக் கல்வி**

கே.கவாஸ்கர் - ஏழாலை

**ஆங்கிலக் கல்வி**

ஏ.அசானி - கொக்குவில், ரீ.துரெந்திரா - சங்கானை, எம்.மெனிசியா மெலானி - 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்., கே.கிருஸ்ண சாந்தினி - மாட்டின் லேன், யாழ்ப்பாணம், ரி.பிரியா - மீசாலை, ஏ.சாமினி ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம், ஆன்.சில்விக்ஸ் டயாளினி - சில்லாலை, எஸ்.ரம்மியா - நீர்வேலி, என்.உஷா - காரைநகர், கண்மணி லக்சனா - வல்வெட்டித்துறை, எஸ்.சியாமலி - துன்னாலை தெற்கு, ரி.கிருபாலினி - கரவெட்டி, எஸ்.பாரதி - புலோலி மத்தி, யு.மிதுஜா - நல்லூர், ரி.நிதர்ஜா - வல்வெட்டி, ஜெ.ஜெயசுதன் - சங்கானை, ஏ.ஹேமலக்ஷ்மி - வல்வெட்டித்துறை, ரி.வினோதயானி - துன்னாலை மத்தி, எஸ்.அனந்தினி - கோப்பாய், எம்.பாலசாயினி - அரியாலை, எம்.சந்துரு - உரும்பிராய்.

**நாடகமும் அரங்கியலும்**

பி.பிரசாந்தி - சுன்னாகம், கே.கே.பிரதீபா - அல்லாரை தெற்கு.

**விசேட கல்வி**

ரி.சரண்ராஜ் - கம்பர்மலை, ரி.நடராஜா - அல்வாய், எஸ்.சிவநந்தினி - கரணவாய் கிழக்கு.

**விஞ்ஞானம் (ஆங்கிலம்)**

எஸ்.பிரார்த்தனா - வல்வெட்டி,

**விஞ்ஞானம் (தமிழ்)**

ஆர்.சுகன்யா - கொன்வென்ட் வீதி, யாழ்ப்பாணம், எஸ்.செல்வராசா - அளவெட்டி தெற்கு, என்.சங்கீதா - புலோலி தெற்கு.

**கணிதம் (ஆங்கிலம்)**

யோ.பிரியசாலினி - சண்டிலிப்பாய். (1)

## யாழ்.வலயத்தில் ஆக்கத்திறன், சமய போட்டிகளின் திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்படவிருந்த மனைப்பொருளியல் பாட ஆக்கத்திறன் மற்றும் சைவநெறிப் போட்டிக்கான திகதிகள் மாற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் கோட்டம், நல்லூர்க் கோட்டம் ஆகியவற்றுக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி நடத்தப்படவிருந்த போட்டிகள் அடுத்த மாதம் 4 திகதிக்கும்-

கோப்பாய் கோட்டத்துக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி நடத்தப்படவிருந்த போட்டிகள் அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கும்-மாற்றப்பட்டுள்ளன. இதேவேளை சைவநெறிப் போட்டிகளுக்கான திகதிகளும் மாற்றப்பட்டுள்ளன.

எதிர்வரும் 26 ஆம் திகதி கோப்பாய் கோட்டத்திற்கு நடத்தப்படவிருந்த போட்டி அடுத்த மாதம் 3 ஆம் திகதிக்கும்-

27 ஆம் திகதி நடத்தப்படவிருந்த நல்லூர் கோட்டப் போட்டி அடுத்த மாதம் 4 ஆம் திகதிக்கும்- 28 ஆம் திகதி நடத்தபடவிருந்த யாழ்.கோட்டப் போட்டி அடுத்தமாதம் 5 ஆம் திகதிக்கும் மாற்றப்பட்டுள்ளன. அடுத்த மாதம்4ஆம்திகதிநடத்தப்படவிருந்த வலய மட்டப் போட்டி அடுத்த மாதம் 11திகதி யும் இடம்பெறும் என்று யாழ். வலயக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது.

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன்20

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளி முன்றலில் நடைபெறவுள்ளன.

சனசமூக நிலையத் தலைவர் சு.செல்லப்பா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்குப் பிரதேச செயலக முன்பள்ளி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ம.ரவிபாலா கலந்து கொள்வார். (203)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்20

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மேற்படி பாடசாலையின் உள்ளக மைதானத்தில் நடைபெறவுள்ளள்ளது.

பாடசாலையின் அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், 'நிக்கொட்' நிறுவன யாழ். அலுவலக உதவிச் செயற்திட்டப் பணிப்பாளர் என்.எஸ். ஆர். சிவரூபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட விரிவுரையாளர் திருமதி அபிராமி சிவரூபன் பரிசில்களை வழங்குவார். (1-241)

## சில இடங்களில் இன்று பி.ப. 5 மணிவரை மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 20

திருத்த வேலைகள் காரணமாக இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை குறிப்பிட்ட சில இடங்களில் மின்சாரம் தடைப்படும் என இங்கை மின்சாரசபையின் சுன்னாகக் கிளையினர் தெரிவித்துள்ளனர். புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும் என மேலும் தெரிவித்தனர்.

## தத்துவவியல் கருத்தரங்கு

யாழ். சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு ''தத்துவார்த்தமும் சமூக நடைமுறையும்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

வரலாற்றுத் தத்துவ ஆசிரியர் ஆ. சபாரத்தினத்தின் அறிமுக உரையைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம் பெறும்.

ஜும்மா பள்ளி வாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள யாழ். பல்கலைக் கழக ஊடகவளங்கள் பயிற்சி மையத் தில் இந்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

மெய்யியல் மாணவர்கள், ஆசிரியர்கள், ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என ஏற் பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (1-120)


## மரண அறிவித்தல்

### கந்தன் கணபதி



மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் கணபதி (18.06.2009) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் தங்கமுத்துவின் அன்புக் கணவரும் புஸ்பானந்தன் (இத்தாலி), பஞ்சாட்சரம், புனிதம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் றஞ்சிதா (இத்தாலி), மஞ்சுளாதேவி, வசந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் பர்மிலன் (இத்தாலி), கவிலன் (இத்தாலி), இந்துசா, நீருஜா, நிசாந் (இத்தாலி), வனேக்சன், பிரசாந்தன், மதுசாலினி, கவிசாலினி, பார்த்தீபன், பகீரதன், கவிசன், காவியன் ஆகியோரின் அன்புப் பேரனும் திருமதி றஜனி இராசரத்தினத்தின் அன்புச் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (19.06.2009) வெள்ளிக்கிழமை மீசாலை பொற்புலவு இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மீசாலை கிழக்கு, மீசாலை. (865/6) செந்தகுமார் (மருமகன்)

## வாடகைக்கும், விற்பனைக்கும் உண்டு

பருத்தித்துறை நகரப் பகுதியில்இயங்கிக் கொண்டிருக்கும் பான்சிக் கடை தளபாடங்களுடன் வாடகைக்கும், அலுமினிய பிற்றிங் விற்பனைக்கும் உண்டு. தொடர்புகளுக்கு: 0774366704

## உடன்தேவை

கணனியில் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்யக்கூடிய பெண்பணியாளர் தேவை. (யாழ். நகருக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது) நேரில் வரவும் நியூ கோல்டன் ஸ்ரார் 226, இராமநாதன் வீதி, திருநெல்வேலி யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 0212226951, 0779522444.

## 31 ஆம் நாள் நினைவலைகள்



*தாயின் மடியில்:*
*25.02.1949*

*இறைவன் அணைப்பில்:*
*19.05.2009*

**திருமதி அமிர்துநாதர் மேரி அல்போன்சா**

தாயாய் தந்தையாய் உடன்பிறப்பாய்
நண்பியாய் என்னுடன் இருந்தாய்
என்னை உயர்ந்த நிலைக்கு உயர்த்தியது - நீர்
எங்கு சென்றாலும் என்னுடன் வந்தது - நீர்
இன்று அநாதையாய் நிற்கிறேன் அம்மா
என்னை ஆதரிக்க அன்புகாட்ட
அரவணைக்க ஆறுதல் சொல்ல யாருமில்லை
தந்தையை இழந்த ஒருவருடத்தில்
உம் துணையுடன் நீர் செல்ல - இன்று
நான் துணையின்றி தனிமையில் தவிக்கின்றேன்
நாள்கள், மாதங்கள், வருடங்கள் சென்றாலும்
உம் நினைவுகள் ஒரு துளி கூட
என்னை விட்டு நீங்காது அம்மா
அம்மா என்று அழைக்கின்றேன் ஒருமுறை பாரம்மா



16/15, ஞானபுரம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தகவல்:
மகள்

## தொழில் வாய்ப்பு

**ஜனசக்தியின் இளம் சாதனையாளர் வரிசையில் நீங்களும்---!**

காப்புறுதித் துறையில் முன்னணி வகிக்கும் ஜனசக்தி காப்புறுதி PLC அதன் வாடிக்கையாளர் சேவையினை மென்மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் சுன்னாகத்தில் புதிய கிளை ஒன்றினை மிக விரைவில் திறக்கவுள்ளது. இப்புதிய கிளை நிறுவனம் தொடர்பில் சந்தைப்படுத்தல் துறையில், பின்வரும் பதவிகளுக்குத் தகுதியுடைய இளமையும் துடிப்பும் மிக்க வாழ்வில் வெற்றிபெறத் துடிக்கும் ஆற்றல் மிகு இளைஞர்கள், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவிகள்:**

1. விற்பனை ஆலோசகர்கள் (SALES ADVISORS)
2. விற்பனை விருத்தி மேற்பார்வையாளர்கள் (SALES SUPERVISORS)
3. விற்பனை விருத்தி உதவியாளர்கள் (BPA)
4. விற்பனை விருத்தி அலுவலர்கள் (BPO)
5. விற்பனை விருத்தி நிறைவேற்றுனர்கள் (BPE)

**தகுதி:**

கணிதம், தமிழ் உட்பட க.பொ.த சா/த இல் ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல். முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

**அனுகூலங்கள்:**

- வரையறையற்ற உயர் வருமானம் ஈட்டும் வாய்ப்புக்கள்
- வெளிநாட்டு சுற்றுலா வசதிகள்
- கடன் வசதிகள்
- இலவசக் காப்புறுதி
- தகுதிக்கு ஏற்ப சம்பளம் மற்றும் இதரபடிகள்
- பயிற்சி / அபிவிருத்தி
- வெகுமதிகள் / ஊக்குவிப்புப் படிகள்
- தொழில் முன்னேற்ற வாய்ப்புக்கள்

**நேர்முகத் தேர்வு:**

திகதி: 23.06.2009
நேரம்: காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை
இடம் : மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்.

**குறிப்பு:-உரிய மூல ஆவணங்கள் மற்றும் பிரதிகளுடன் சமுகமளிக்கவும்.**

*உதவி முகாமையாளர் - ஆயுள்பிரிவு*
*இல.165, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.* T.P: 0212223827, 9552.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரி முகாம்களில் கஷ்ட நிலையிலுள்ள குடும்பங்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்குவதற்குத் தீர்மானம்

நல்லூர்,ஜூன்20

நலன்புரி நிலையங்களில் கஷ்டத்தை எதிர்நோக்கும் குடும்பங்களின் அவசர தேவைகளுக்கென மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா வீதம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள எமது உறவுகளின் கையில் ஒரு சதம் கூட இல்லாத நிலையில் 20 சதவீதமானவர்கள் மிகவும் கஷ்டமடைகின்றனர்.

நலன்புரி நிலையத்தில் உள்ள கடையில் மிகவும் குறைந்த அளவிலான சீனியைக் கூட வாங்கிக்கொள்ளமுடியாத அளவுக்கு மிகவும் சிரமமடையும் மக்களுக்கு முடிந்தவரை சிறுதொகைப் பணத்தையாவது வழங்கி உதவவேண்டிய தேவை இருக்கிறது.

அந்தவகையில் மிகவும் கஷ்டநிலையில் வாழும் மக்களுக்கு இந்து அமைப்புகளின் ஒன்றியமும் யாழ்.வணிகர் கழகமும் இணைந்து மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

நல்லை ஆதீன முதல்வரும் இந்து அமைப்புகள் ஒன்றியத்தின் தலைவருமான நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ்.வணிகர் கழகத்தின் தலைவர், செயலாளர் ஆகியோர் இந்த யோசனையை முன்வைத்தனர்.

மிகவும் கஷ்டமான நிலையில் கையில் ஒரு சதம் கூட இல்லாது சுமார் 400 வரையான குடும்பங்கள் உள்ளன.

இவர்களுக்கான இந்த உதவிக்கு மாதம் ஒன்றுக்கு 4 லட்சம் ரூபா வரை தேவை.

அடுத்துவரும் மூன்று மாத காலத்துக்குப் பரீட்சார்த்தமாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

குறிப்பிட்ட உதவி அந்த மக்களுக்கு மிகவும் அவசியமானது.

தொடர்ந்தும் அதனை முன்னெடுக்கக் கூடியதாக வசதி படைத்த மக்கள் வெளிநாடுகளில் வதியும் உறவுகள் உதவமுன்வரவேண்டும்.

இது தொடர்பாக வர்த்தகர்கள் மற்றும் அரச, அரச சார்பற்ற அமைப்புகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் உதவியும் எதிர்பார்க்கப்படுகிறது.

கஷ்டப்படும் இந்த மக்களுக்கு ஒரு சிறிதளவான ஆறுதலை அளிக்கக்கூடியதான இந்தத் திட்டத்திற்கு அனைத்து மக்களதும் ஒத்துழைப்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உதவ விரும்புபவர்கள் வணிகர் கழகத்திலோ இந்து அமைப்புகள் ஒன்றியத்திடமோ தமது கொடுப்பனவுகளை வழங்கி அதற்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-111)

## விளையாட்டு விழா

நவாலி,ஜூன்20

ஆனைக்கோட்டை விநாயகர் முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு க.இராசேந்திரம் தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (204-100)

## கூட்டங்கள்

சங்கானை,ஜூன்20

வலிகாமம் மேற்குப் பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கலாசார அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டும் எனப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (204-29)

* * *

சித்தங்கேணி,ஜூன்20

மானிப்பாய் மேற்கு, முதியோர் நலன் காக்கும் கழகத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குக் கட்டுடை சைவ வித்தியாசாலையில் ந.கணேசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சமூகசேவை உத்தியோகத்தர் வே.அருந்தவராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (204-112)

## புற்றுநோயாளர்களின் உதவு நிதிக்கான கலைவிழா

நவாலி,ஜூன்20

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வலிகாமம் மேற்குப் பிரிவினர் புற்றுநோயாளர்களின் உதவு நிதிக்காக நடத்தும் கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சி.உதயசூரியன் தலைமையில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நாட்டிய நாடகம், இராமாயணக்காட்சி, காத்தவராயன் சிந்து நடைக்கூத்து, சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினரின் நகைச்சுவை நாடகம் ஆகிய கலைநிகழ்வுகள் இடம் பெறும். (204-100-28)

## யாழ்.ப.நோ.கூ. சங்கத்திற்கு ஏ-9 ஊடாகப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்20

யாழ்.ப.நோ.கூ சங்கத்திற்கு ஏ-9 தரைப் பதையூடாக பாரவூர்தி மூலம் பொருள்கள் வந்துசேர்ந்துள்ளன.

சமையல் எண்ணெய் மற்றும் கால்நடை தீவனங்கள் போன்ற பொருள்களே எடுத்து வரப்பட்டுள்ளன.

இதனைவிட அடுத்துவரும் பாரவூர்திகளில் சீனி உட்பட மற்றும் சில அத்தியாவசியப் பொருள்கள் கொண்டுவரப்படவுள்ளன என்று கூறப்பட்டது. (203-224)

## யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கப்பல் மூலம் மருந்துப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்20

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கப்பல் மூலம் மருந்துப் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட இந்த மருந்துகள் மற்றும் வைத்தியசாலைக்கு தேவையான பொருள்கள் உடனடியாக இறக்கப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்த மருந்துப் பொருள்களைத் தவிர ஒரு தொகுதி 'எக்ஸ்ரே பிலிம்ஸ்'களும் வந்துசேர்ந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தட்டுப்பாடான மருந்து வகைகளும் இந்த மருந்துவகைகளுடன் எடுத்து வரப்பட்டனவா போன்ற விவரம் இதுவரை தெரியவில்லை என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (203-224)

## வலி.கிழக்கு அபிவிருத்திச் சங்கங்கள் நலத்திட்டங்களுக்கு உதவக் கோரிக்கை

கோப்பாய்,ஜூன்20

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் கிராம, மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் தமது அபிவிருத்தி நலத்திட்டப் பணிகளைச் சிறப்பாக முன்னெடுக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் அதிகளவில் உதவி செய்ய முன்வரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளன.

தற்போது சங்கங்களின் செயற்பாடு விரிவாக்கம் பெற்றுவரும் வேளையில் பல பொதுமக்களும் ஆர்வத்துடன் நாடி வந்து தேவைகளைப் பெற விண்ணப்பிக்கின்றனர்.

ஆனால் இவற்றை நிவர்த்தி செய்ய சுயதொழில் வசதிகளை விரிவாக்கம் செய்ய போதுமான நிதி இல்லாமலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப்பிரதேச செயலர் பிரிவு முழுமையான விவசாய பிரிவாதலால் விவசாய குடும்பங்களே அதிகளவில் வசிப்பதாகவும் இவர்களின் குடும்பங்கள் விவசாயத்தோடு பல்வேறு சுயதொழிலிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றன.

அவர்களுக்கு உதவி செய்ய அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டுமென இப்பிரதேசத்தின் மாதர், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (203 - 72)

## தென்மராட்சியில் செய்கை மேற்கொள்ளப்படவுள்ள பயிர்கள் தொடர்பான விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்20

தென்மராட்சிப் பிரதேசத்தில் 2009/2010 காலப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள பயிர்ச்செய்கைக்கான பயிர்கள் பற்றிய விவரங்கள் கமநல சேவைகள் நிலையங்களினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள காலபோக நெற்செய்கை, மரக்கறிப் பயிர்ச்செய்கை ஆகியவை தொடர்பான விவரங்கள் அந்தந்தக் கமக்கார அமைப்புகள் ஊடாக சேகரிப்பட்டு வருகின்றன.

பயிர் செய்யப்படும் நெற்காணிகள், மேட்டுநிலக் காணிகள், உற்பத்தியாளர்கள், செய்கைபண்ணப்படும் மரக்கறி வகைகள், பயிர்ச்செய்கைக் காலங்கள், பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிகள், உற்பத்திக் கிராமங்கள் அந்தந்தப் பிரிவில் செயற்படுத்த வேண்டிய விவசாய வேலைத்திட்டங்கள், விவசாயத் திணைக்களத்தில் பெற்ற உதவிகள், எதிர்பார்க்கப்படும் பயிர்ச் செய்கை உதவிகள் போன்ற விவரங்கள் திரட்டப்படுகின்றன.

உற்பத்தியாளர்கள் இந்த விவரங்களை தத்தமது கமக்கார அமைப்புக்களுடன் தொடர்புகொண்டு வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (203- 207)

## சிறுவர்களுக்கான முகாம்

கரவெட்டி,ஜூன்20

வடமராட்சி வலயக்கல்வி அலுவலக விசேட கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் தரம் ஒன்று முதல் ஐந்துவரை கல்வி கற்கும் சிறுவர்களுக்கான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த முகாமில் சம்பந்தப்பட்ட மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு விசேட கல்விப் பிரிவின் ஆலோசகர் தெ.புவனேந்திரன் அறிவித்துள்ளார். (204-70)

## நிறுவுநர் நிகழ்வும் பரிசில் வழங்கலும்

சங்கானை,ஜூன்20

சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையின் நிறுவுநர் தினமும் பரிசு வழங்கல் நிகழ்வும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் அதிபர் வெ.இராஜகுமார் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு பிரதம விருந்தினராகவும் சங்கானை வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் நிறுவுநர் நினைவுரையை ஆற்றவுள்ளார். (204-29)

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில் கோழிவளர்ப்புக்கு பயிற்சி வகுப்பு

சித்தங்கேணி,ஜூன்20

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கோழிவளர்ப்புக்காகத் தெரிவு செய்யப்பட்ட 17 பயனாளிகளுக்கான கோழி வளர்ப்புப் பற்றிய பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்துப் பயனாளிகளையும் கலந்துகொள்ளுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் ஏ.வி.அருந்தவராஜா அறிவித்துள்ளார். (204-112)




## மரத்திலிருந்து தவறி விழுந்து இருவருக்குக் காயம்

யாழ்ப்பாணம்,ஜூன்20

மரத்திலிருந்து தவறி வீழ்ந்து பாடசாலை மாணவன் உட்பட இருவர் காயமடைந்தனர்.

பனை மரத்திலிருந்து தவறி ஆலமரத்தில் விழுந்த குடும்பஸ்தரான மீசாலை மேற்கைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் யோகேஸ்வரன் (வயது 45) என்பவருக்கு கை முறிந்தது.

இளநீர் பிடுங்க மரத்தில் ஏறியவேளையில் வட்டுக்குள்ளிருந்த தேள் கடித்ததால் தவறிவீழ்ந்ததில் ச.வசீகரன் (வயது 13) என்னும் மாணவனுக்குத் தலையில் காயமேற்பட்டது.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (203-207)



வல்லை சிதம்பரக் கல்லூரியின் கண்காட்சி நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.தங்கராசா மற்றும் விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதை முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

விஞ்ஞானப் பிரிவை வல்லை சிவகுரு வித்தியால [illegible] தை மூன்றாவது படத்திலும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பொருள்களில் ஒரு பகுதியை நான்காவது படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் சக்தி

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

## 2009 விரோதி வருட

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | | | |
|---|---|---|---|
| 23.06.2009 செவ்வாய்க்கிழமை | முதலாம் திருவிழா | பகல் | கொடியேற்றம் (12.00 மணி) |
| 27.06.2009 சனிக்கிழமை | 05ஆம் திருவிழா | இரவு | முத்துச்சப்பரம் |
| 29.06.2009 திங்கட்கிழமை | 07ஆம் திருவிழா | இரவு | கைலைக் காட்சி |
| 01.07.2009 புதன்கிழமை | 09ஆம் திருவிழா | பகல் | எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் |
| 02.07.2009 வியாழக்கிழமை | 10ஆம் திருவிழா | பகல் | சிவபூசை கைலைக்காட்சி |
| | 10ஆம் திருவிழா | இரவு | திருமஞ்சம் |
| 03.07.2009 வெள்ளிக்கிழமை | 11ஆம் திருவிழா | பகல் | விசேட கருட - சர்ப்ப பூசை வாயுபட்சணி நாகம் வீதியுலா, இரவு பூந்தண்டிகை |
| 05.07.2009 ஞாயிற்றுக்கிழமை | 13ஆம் திருவிழா | பகல் | கைலைக்காட்சி, இரவு சப்பரம் |
| 06.07.2009 திங்கட்கிழமை | 14ஆம் திருவிழா | பகல் | தேர் 9.30 மணி |
| 07.07.2009 செவ்வாய்க்கிழமை | 15ஆம் திருவிழா | காலை | தீர்த்தம் |
| | 15ஆம் திருவிழா | இரவு | திருவூஞ்சல், கொடியிறக்கம் |
| 08.07.2009 புதன்கிழமை | 16ஆம் திருவிழா | இரவு | தெப்போற்சவம் (பூங்காவனம்) |

குறிப்பு:- ஆலயத்தில் நடைபெறும் நித்திய அன்னதானப் பணி, அடியார்களின் பேராதரவுடன் அடியார் பணியாக ஆலய அறங்காவலர் சபையினரால் ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள இறைபயணிகள் இல்லத்தில் நடைபெற்றுவருகின்றது. இத்திருப்பணிக்கும் வேறு தனிப்பட்ட சபையினர், நிறுவனங்களுக்கும் எவ்வித தொடர்புமிலலையென்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க**

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

நயினாதீவு.
www.nainainagapooshani.com

அறங்காவலர் சபை,
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.

(C559283)



## மேலதிக அரசாங்க அதிபரை உளமார வாழ்த்துகின்றோம்



எமது சண்டிலிப்பாய் முன்னாள் பிரதேச செயலரான

**திருமதி ரூபினி வரதலிங்கம்**
(SLAS-I)

மக்கள் பணியாற்றி சேவை புரிந்து மேலதிக அரசாங்க அதிபராகப் பதவி உயர்வுபெற்ற அவர்களை மேலும் நல்ல பணியாற்ற மனதாரப் பாராட்டுகின்றோம்.

ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய் வடக்கு.

சனசமூக நிலையமும்,
கலைவாணி முன்பள்ளியும்.

(C/559090)



## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் குறைந்த விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம்.
**நல்லூர் பாம் சென்ரர்,**
முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

(86365)



## தேவை

நயினை நாகபூஷணி அம்மன் அமுத சுரபி அன்னதான மடத்துக்கு 20.06.2009ஆம் திகதியிலிருந்து 05.07.2009ஆம் திகதி வரை வாழைத்தடல்கள், வாழை இலைகள் என்பன தேவை. அன்பளிப்பாகவோ அல்லது விலையாகவோ கொடுக்கலாம்.

தொடர்பு:- தாமோதரம் விலாஸ் அல்லது சிவகுமார் வெற்றிலைக்கடை, யாழ்ப்பாணம்.

(86362)


## பண்டத்தரிப்பு அம்மன் வீதி புனரமைப்பு

வலி. தென்மேற்கு பிரதேசத்தில் பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள அம்மன் வீதி யு.என்.ஓ.பி.எஸ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

பல வருடங்களாகப் போக்குவரத்து செய்யமுடியாதவாறு மிகமோசமான நிலையில் பழுதடைந்திருந்த இவ்வீதியை புனரமைத்துத் தரும்படி இப்பகுதி மக்கள் பிரதேசெயலாளரிடம் விண்ணப்பித்திருந்தனர்.

பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு. சிவலிங்கம் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக 1.2 கிலோ மீற்றர் நீளமுள்ள மேற்படி வீதி பல லட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்பட்டு வருகிறது.

(03-115)


## மல்டிமீடியா பயிற்சிநெறிகள்

ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்...

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் ஒரே பயிற்சி மல்டிமீடியாவாகும்....

**Advanced Diploma in Digital Pre-Press** 3 months ADDP

**Diploma in Digital Video Production** [video editing & other effects] 3 months DVP

50% OFF



இந்தியாவில் கிராபிக்ஸ் அனிமேஷன் துறைக்காக போட்டி நடாத்தும் ஒரே நிறுவனமான CSC SOFTVIEW VISUAL COMMUNICATION வழங்கும் சர்வதேச தரச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளக்கூடிய முழுமையான பயிற்சி நெறியை எமது யாழ் நகரம் மற்றும் நெல்லியடி பயிற்சி மையங்களில் மேற்கொள்ளலாம்.

இலவச பாடநூல்களுடன் கூடிய கற்கை நெறி — 100% Practical

**ASIAN- CSC COMPUTER EDUCATION**

26, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
Tel :021 222 5677

கிளை: கொடிகாமம் வீதி, நெல்லியடி
Tel :077-3122198


## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையின் பழைய மாணவர்களுக்கான வெள்ளிவிழா தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கைதடி சித்த மருத்துவத்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மேற்படி துறையின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

(204)


## விண்ணக வாழ்வின் நிறைவின் நினைவு நாள் - 20.06.2009



மண்ணில் 29 . 03 . 1922
விண்ணில் 20 . 06 . 2008

**அமரர் யோன் ஞானமுத்து**

"இது என்றென்றும் நான் இளைப்பாறும் இடம்
இதை நான் விரும்பியதால் இதையே
என் உறைவிடமாக்குவேன்" (தி.பா-132:14)

முழுமதியாய் நீயிருக்க அதன் நிலவில் நாம் வாழ்ந்தோம்
ஆணிவேராய் நீயிருக்க அதன் செழிப்பில் நாம் வளர்ந்தோம்
தோணியாய் நீயிருக்க ஏணியாய் நாம் உயர்ந்தோம்
அந்தோ இன்று உன் திங்கள் முகம் காணாது
திகைக்கின்றோம் நாம் இங்கு.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தேவாலய வீதி,
மல்லாகம்.

(86363)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை நிறுத்தம்; சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கடும் விசனம்

கொழும்பு,ஜூன்20

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்படாமல் ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணைகளை இடைநடுவில் முடித்துக்கொண்டமை குறித்து கடும் அதிருப்தி வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையும் சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகமும் சமீபத்தைய உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.நா.செயலாளர்ருக்கு வழங்கிய உறுதிமொழிகள் குறித்து சந்தேகம் வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் தோல்வி இலங்கை அரசுக்கு மனித உரிமை மீறல்கள் குறித்துப் பதில் சொல்வதற்கான அரசியல் உறுதிப்பாடு இல்லாததைப் புலப்படுத்துகின்றது எனத் தெரிவித்துள்ள இரு அமைப்புகளும் இதன் காரணமாக சர்வதேச விசாரணைகளின் தேவை என்பது புலனாகிறது எனத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் மோதல்களின்போது இடம்பெற்ற மனித உரிமை துஷ்பிரயோகங்கள் குறித்த விசேட விசாரணையை முடித்துக் கொள்வதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

அரசின் இந்த அறிவிப்பு இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இழைத்த மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கு சர்வதேச ஆணைக்குழு அவசியம் என்பதை வலியுறுத்தியுள்ளது.

பாரிய ஆரவாரத்துடன் ஆரம்பமான இலங்கை ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் அதிருப்தி, முணுமுணுப்புடன் முடிவடைந்துள்ளன என மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான பிரதி இயக்குநர் எலைன் பேர்சன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக இரு தரப்பினதும் மனித உரிமை மீறல்கள் குறித்த சர்வதேச விசாரணைகளுக்கான தேவை அதிகரித்துள்ளது.

2006இல் உருவாக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணைக்கான ஆணைக்குழுவிற்கு பலவந்தமாகக் காணாமற் போதல், படுகொலைகள் மற்றும் மோசமான துஷ்பிரயோகங்கள் உட்பட 16 சம்பவங்கள் குறித்து ஆராய ஆணை வழங்கப்பட்டிருந்தது.

இதன் விசாரணைக்காலம் ஜூன் 14 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. அரசு இதன் கால எல்லையை நீடிக்கவில்லை. குறிப்பிட்ட ஆணைக்குழுவின் தலைவரான முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் நிசங்க உடலகம 16 சம்பவங்கள் குறித்தும் விசாரணைகள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

எனினும், ஆணைக்குழுவின் அறிக்கைகள்எவையும் வெளியிடப்படாததுடன், நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. ஜனாதிபதி ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை முடித்துக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை, ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கு அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்றும் நோக்கம் அதற்கு இல்லாததைப் புலப்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக சம்பந்தப்பட்ட நாடுகள் தலையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்க முன்வரவேண்டும். மிக மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்து, குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதில் இலங்கை அரசின் முழுமையற்ற நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக இது அமைந்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ஆணைக்குழு தான் விசாரணை செய்த விடயங்கள் பற்றிய விவரங்களைப் பகிரங்கப்படுத்த வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

குறிப்பிட்ட ஆணைக்குழுவிற்கு அதன் பணிகளைத் தொடர்வதற்கான கால நீடிப்பு வழங்கப்படாததால், அதன் விசாரணை பூர்த்தியாகவில்லை என மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

ஆணைக்குழு தனக்கு அறிவிக்கப்பட்ட 16 சம்பவங்களில் 7 சம்பவங்கள் குறித்து மாத்திரம் விசாரித்தது. ஐந்து குறித்து மாத்திரம் அறிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்ட நிலையில் ஒருவருக்குக் கூட நீதி வழங்கப்படவில்லை என்றும் மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

## பன்றிக்காய்ச்சல் தொற்று; 4ஆவது நபரும் இனங்காணப்பட்டார்

கொழும்பு, ஜூன்20

இலங்கையில் பன்றிக்காய்ச்சால் நோய்த் தொற்றுக்குள்ளான நான்காவது நோயாளியும் நேற்று முன்தினம் இனங்காணப்பட்டுள்ளார்.

இவர்களில் இருவர் முதலாவது நோயாளியின் உறவினர்கள் என்றும் மற்றவர் ஒன்றாகப் பணயம் செய்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நோய்க்கு உள்ளானவர்கள் அங்கொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் வைத்தியர் சுதப்பீரிஸ் தெரிவித்தார்.

## கடும் காற்று வீசுவதால் வாழைச் செய்கையாளர் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 20

தற்போது வீசும் பருவப் பெயர்ச்சிக் காற்றினால் குலைகளுடன் உள்ள வாழைகள் முறிந்து விழும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாள்களாகக் காற்றின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(203-224)

## அச்சுவேலி, ஆவரங்கால் பகுதி உணவகங்களில் பாவனைக்கு உதவாத உணவுகள் அழிப்பு

அச்சுவேலி, ஜூன்20

அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் உள்ள உணவகங்களின் மீது திடீர் பரிசோதனை நடத்திய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்களைக் கைப்பற்றி பொதுமக்கள் முன்னிலையில் அழித்தனர்.

அச்சுவேலி பஸ் நிலையப் பகுதியில் உள்ள உணவகங்களில் இருந்து பழுதடைந்த இறைச்சிக்கறி, பழுதடைந்த சிற்றூண்டிவகைகள், இரண்டாம் தடவை பொரித்த வடை, நாள்சென்ற மீன் துண்டங்கள், உரிய நடைமுறையில் பராமரிக்கப்படாத உணவு வகைகள் என்பனவற்றைக் கண்டு பிடித்து பொதுமக்களுக்கு அவற்றினால் ஏற்படக்கூடிய தீமைகளை எடுத்துக் கூறி பொதுமக்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டன.

அச்சுவேலி I சுகாதாரப் பரிசோதகர் எஸ். எஸ்.ரவிவர்மன், அச்சுவேலி II பொதுச் சுகாதார பரிசோதகர் பி.சயந்தன் மற்றும் பிரதேசசபை அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் உணவுச்சாலைகளுக்கு திடீர் விஜயம் செய்து பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்களைக் கண்டு பிடித்து அழித்தனர்.

இது தொடர்பாக பொதுச்சுகாதார பரிசோதகர் எஸ்.ரவிவர்மன் தகவல் தருகையில்:

பொதுச்சுகாதார நடைமுறைகளுக்கு முரணாக செயற்படுவோர் மீது அடுத்த மாதத்தில் இருந்து வழங்குத்தாக்கல் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பண்டங்களின் விற்பனையில் ஊழல் புரிவோர் மற்றும் பொதுச்சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத விற்பனை நிலையங்கள் தொடர்பாக தகவல்களை வழங்கிப் பொதுமக்கள் உதவ்வேண்டும்- எனத் தெரிவித்தார்.

(203-11)

## மக்கள் முகம்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விசேட கல்வித் துறை விரிவுரையாளர் த.சிவகுமார் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் புகைப்படப் போட்டியில் (திறந்த போட்டி) வட மாகாணத்தில் இரு பிரிவுகளில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் தேசிய மட்டத்தில் அதி உயர் விருதினையும் பெற்றுக்கொண்டார்.

த.சிவகுமார் வட மாகாணத்தில் இரு பிரிவுகளில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்றமைக்காக 7500 ரூபா பணப்பரிசும் தேசிய மட்டத்தில் அதிஉயர் விருதினைப் பெற்றமைக்காக பெறுமதிமிக்க சான்றிதழையும் பரிசுத் தொகையையும் பெற்றுள்ளார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் கல்வி விழிப்பூட்டல் பிரிவின் ஒழுங்குபடுத்தலுடன் பாவனைக்குப் பின்னரான பிளாஸ்ரிக் கழிவுப்பொருள்கள் முகாமைத்துவ தேசிய கருத்திட்டத்தின் நிதியுதவியுடன் இப்போட்டி தேசிய மட்டத்தில் நடத்தப்பட்டது.

இது சம்மந்தமான புகைப்படக் கண்காட்சி கடந்த 4, 5, 6ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்றுப் பரிசளிப்பு விழா கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.



மல்லாகத்தைச் சேர்ந்த நாகேந்திரன் காயத்திரி கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்டமாணிப் பட்டம் பெற்றுள்ளார். பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இவருக்கான பட்டச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை மல்லாகம் மாக வித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றிலும் பெற்றுள்ளார்.

சட்டத்தரணி எஸ்.பீ.சிவஞானத்திடம் ஜூனியராகப் பயிற்சி பெறுகிறார்.

## வாசகர் திருமுகம்

### ஏன் இந்தப் பாரபட்சம்

யாழ்ப்பாணம்- சில்லாலை ஊடான இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக நடைபெறவில்லை. இதற்கான காரணம் பற்றி சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டபோது ரயர், ரியூப் இல்லை என்கின்றனர். எமது பிரதேசத்திற்கான பஸ்சேவை இளவாலை சேவையாக நடத்தப்படுகின்றது. மேற்படி பிரதேசத்துக்கும் மாலை 6 மணிக்கே ஒரு சேவை இடம்பெறுகின்றது.

இலங்கைப் போக்குவரத்துச்சபை யாழ்.சாலையின் அதிகாரிகள் ஏன் பாரபட்சத் துடன் நடத்துகின்றனர் என்று தெரியவில்லை. கொடிகாமம், ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை ஆகிய பிரதேசங்களுக்கு அரை மணி நேரத்துக்கு பஸ் சேவை நடத்தப்படுகின்றது. காலை தொடக்கம் மாலை வரை எமது பிரதேச வீதிகளில் தேவையானளவு பஸ்ஸை காண முடியவில்லை.சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையத்தில் காத்திருந்தால் அரைமணி நேரத்துக்கு ஒருசேவை நடைபெறுகின்றது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எல்லா இடத்துக்கும் சம அளவான சேவைகளை நடத்துவதே நியாயம். இளவாலை, சில்லாலை ஆகிய பிரதேசங்களுக்கு நான்கு, ஐந்து சேவைகளையாவது நடத்துவார்கள் என நம்புகின்றோம்.

பாதிக்கப்படும் பயணிகள் சார்பில்:
பி.நிசாந்தன், ஆர்.பிரதீபன்.

### வீதி அபிவிருத்தி சபைக்கு ஒரு பாராட்டு

கோப்பாய் சந்தியிலிருந்து கைதடி செல்லும் மானிப்பாய் வீதி 02.01.2009 வெள்ளியன்று பொதுமக்களின் பாவனைக்கு திறந்து விடப்பட்டது.

இவ்வீதியின் சேதங்களை தார்போட்டுச் செப்பனிட்டும், திருத்தப்படும் பாலத்திற்கு அருகிலான துணைப்பாதையையும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் (RDA) மிகத் துரித் தமாகத் திருத்தி அமைத்தனர். சனி, ஞாயிறு தினங்களில் பகல் முழுநேரமும் (RDA) யின் பொறியியலாளர், தொழில்நுட்ப அலுவலர், ஊழியர்கள் தம்மைஅர்ப்பணித்து உழைத்த னர், சிறப்பாக வீதியை புனரமைத்தனர். இதற்கு எமது பாராட்டுக்கள்.

வீதி அபிவிருத்தித் திணைக்களம் (RDD) இராச வீதியை நிஷா வெள்ளப் பெருக்கிற்கும் ஈடுகொடுக்கக் கூடிய வகையில் சிறப்பாக அமைத்தனர். அதற்கும் அவர்களுக்கு ஒரு பாராட்டுக்கள்.

இது போன்ற அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை அறியுமிடத்து பாராட்டுவது எமது கடமை.

கைதடி. வே.தபேந்திரன்.

### இட்டலியே் ஏன் மெலிந்து போனாய்...!

மேற்படி தலையங்கத்தைக் கண்டதும் வயது முதிர்ந்த வாசகர்கள் பலர் பழைய சினிமாப் பாடல் ஒன்றை ஞாபகத்துக்கு வரவழைக்க முற்படுவர். சுற்றி வளைப்பானேன் எனக்கு எட்டியதைச் சொல்லி விடுகின்றேன். இதுதான் அப்பாடலின் ஆரம்ப வரிகள். ''இட்டலியே ஏன் மெலிந்து போனாய் எந்தப் பயல் மீது காதலானாய்'' என்பதுதான் அது.

யாழ்.நகரில் பிரபல்யமான பல உணவகங்களில் இட்டலியும் வடையும் வாய்ப்பனும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி மெலிந்து கொண்டே போகின்றன. ஆனால் அவற்றின் விலைகள் மட்டும் உறுதியாக அப்படியே இருக்கின்றன. அரசாங்க அதிபர் தலைமையில் நடந்த கலந்துரையாடலில் விலைகள் குறைத்து நியாய விலையில் விற்கப்படும் எனச் செய்திகள் வந்தன. பெரிய வடை 15 ரூபா எனவும் சிறிய வடை 10ரூபா எனவும் விற்கப்பட்டன (சொற்பகாலம்). பழைய குருடி கதவைத் திறவடி என மீண்டும் விலை ஏறிவிட்டது.

மக்கள் விலையில் பேரம் பேசாது வயிற்றுப்பசியைத் தீர்ப்பது உணவகங்களில் மட்டும்தான் . சாப்பிட்டு விட்டு எழுமுன் பரிமாறியவர்கள் ''ஐயா விலை ஐம்பது'' என்பார். கணக்குக் கேட்காமல் காசைக் கொடுத்து விட்டு ஐம்பது யார் நடக்க முதல் சாப்பிட்ட வடையும் வயிற்றுக்குள் மாயமாய் மறைந்து விடும்.

யாழ்.மாவட்டத்தில் விலைக்கட்டுப்பாட்டதிகாரிகள் எத்தனைபேர் கடமை புரிகிறார்களோ தெரியாது. இவர்களைப் பொதுமக்கள் அடையாளம் காணமுடிவதில்லை. என்ன சொன்னாலும் ''திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது'' என்ற மற்றொரு சினிமாப் பாடலை அசை போட்டுக் கொண்டு நடையைக் கட்ட வேண்டியதுதான்

தாவடி. முத்தையா மயிலாமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்
## முதல்வர் திரு. குப்புசாமி கதிர்காமசேகரர் அவர்களின்
## மணிவிழாச் சிறப்பு மலர் - 20.06.2009

### ஆயிரம் பிறைகண்டு வாழ்க



வித்தியாலய அதிபராகச் சிறப்புடன் பணியாற்றிவந்த உயர்திரு கு.கதிர்காமசேகரர் அவர்கள் தமது சேவையில் இருந்தும் 20.06.2009 இல் இளைப்பாறுகிறார். அவருக்கு ஆசியுரை வழங்குவதை இட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

அதிபர் அவர்கள் இளைப்பாறும் காலத்திலும் கல்விச் சேவைக்கும் சமூக சேவைகளுக்கும் ஆலோசனைகள் வழங்கி, மனைவி, மக்களுடன் வாழ்வாங்கு வாழ்ந்து "ஆயிரம் பிறை காண வேண்டுமென்று வாழ்த்தி நல்லாசியைக் கூறி அமைகின்றேன்.

சி.சிதம்பர நாதக் குருக்கள்.
திருக்கணித நிலையம், மட்டுவில், சாவகச்சேரி.

### சிறந்த அதிபர்



திரு.கு.கதிர்காமசேகரர் அவர்களது 37 வருட கல்விப் பணியைப் பாராட்டும் முகமாக இப் பாராட்டுச் செய்தியை வரைவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இக் காலப்பகுதியில் தென்மராட்சியில் சிறந்த ஆசிரியராக, அதிபராக இவர் மிளிர்ந்தார் என்பதில் பிரதேசக் கல்வியாளர்களிடம் கருத்து வேற்றுமை இல்லையெனலாம். மீசாலை விக்கினேஸ்வரா, விடத்தற்பளை கமலாசனி, கல்வயல் சண்முகானந்தா ஆகிய கல்விக் கூடங்களின் வளர்ச்சியில் அதிபராக திரு.கதிர்காமசேகரர் முத்திரை பதித்துள்ளமையை இப் பாடசாலைச் சமூகங்கள் ஏற்றுக் கொண்டுள்ளனவெனக் கூறில் மிகையாகாது. அவர் தனது ஓய்வு நிலையிலும் பிரதேச கல்வி வளர்ச்சியில் அக்கறையுள்ளவராக இருப்பாரென்ற எதிர்பார்ப்புடன் அவர் சுகதேகியாக வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் க.கந்தசாமி,
பௌதிகவியற்துறைத் தலைவர்,யாழ்.பல்கலைக்கழகம்.

### பாராட்டி வாழ்த்துகின்றேன்



"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்பது வள்ளுவர் வாக்கு.

"நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை திறமான புலமை எனில் பிறநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்."

21.06.2009 அன்று தனது அறுபதாவது அகவையைப் பூர்த்திசெய்து மணிவிழாக் காணும் நாயகர் திரு.கு.கதிர்காமசேகரர் அவர்கள் இத்தகைய பெருமைக்குரியவர்.

இத்தகைய நல்லியல்புகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட, இம் மணிவிழா நாயகனை இச் சந்தர்ப்பத்தில் பாராட்டி வாழ்த்துதோடு, அவரது எதிர்காலம் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி ஆசி வழங்குகிறேன்.

திரு.கு. பிறேமகாந்தன்
வலயக்கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி.

### வாழ்த்துவதில் மகிழ்கின்றேன்



அதிபர் சேவையிலிருந்து ஓய்வுபெறும் திரு.கு.கதிர்கமசேகரர் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில், மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். 37 வருடங்கள் ஆசிரியராக, அதிபராக சிறப்பாகச் சேவை புரிந்துள்ள ஒரு சேவையாளன் இவர். தான் கடமை புரிந்த அனைத்து பாடசாலைகளிலும் மாணவர் அடைவு மட்டத்தை அதிகரித்தல், இணை பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவரது பெறுபேற்றை உயர்த்தல், பாடசாலைகளின் பௌதிக வளத்தினை விருத்தி செய்தல் ஆகிய பல்வேறுபட்ட பணிகளில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். அவரது ஓய்வுக் காலம் சிறக்கவும், குடும்பத்துடன் நலமாக நீண்ட காலம் வாழவும் இறையருள்துணை நிற்க வேண்டி வாழ்த்துகின்றேன்.

திரு.நா.சத்தியநாதன்,
இளைப்பாறிய கோட்டக்கல்வி அலுவலர்,

### அதிபர் சேவைக்கு ஒரு "Bench mark"




"ஒரு பாடசாலையை எவ்வாறு சிறந்தோங்கும் வகையில் நிர்வகிப்பது" என்பதற்கு, சிறந்த எடுத்துக்காட்டாளராக தனது சேவையை எமது அதிபர் நல்கியுள்ளார். திரு.கு.கதிர்காமசேகரர் அவர்கள் அதிபராக எமது பாடசாலையை பொறுப்பேற்ற நாளில் இருந்து இன்றுவரை அர்ப்பணிப்புடன் கல்வி அபிவிருத்தி, இணைபாடவிதானச் செயற்பாடுகள் மற்றும் பௌதிகவள விருத்தி என்பவற்றில் கவனம் செலுத்தி எமது பாடசாலையில் கற்றல், கற்பித்தக்கான ஒரு சிறந்த கவின் நிலையை ஏற்படுத்தியுள்ளார். இவ்வகையில் இவரது செயற்பாடுகள் அதிபர் சேவையினரால் "பின்பற்றக்கூடிய ஒரு முன்மாதிரி" Bench mark என்றால், அது மிகையாகாது.

அதிபர் அவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்ச்சியானதாகவும் நிறைவானதாகவும் அமைய இறைவனை வேண்டி என்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

நா. ஞானகுமார், உபஅதிபர்,
யா/ மீசாலை விக்னேஸ்வரா ம.வி.

**பாடசாலைச் சமூகம்**



### முதல்வரின் வாழ்க்கைப் பதிவுகள்

01. பிறப்பு: 21.06.1949
02. பாடசாலைக் கல்வி :

ஆரம்பக் கல்வி:
யா/ மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம்

இடைநிலைக் கல்வி:
யா/ மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.

உயர்தரம் : யா/புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி

உயர்கல்வி:
Dip.in Agriculture, Sp.Tr, S.L.P.S -I

03.சேவை விவரம்:
முதல் நியமனத் திகதி-1972.12.04

ஆசிரியர் சேவை:
1972.12.04 -1989.05.31 (16 1/2 வருடங்கள்)

அதிபர் சேவைII:
1989.06.01 -1994.05.31 (5வருடங்கள்)

அதிபர் சேவை I:
1994.06.01 - 2009.06.20 (15 வருடங்கள்)

மொத்த ஆசிரியர் சேவை: 16 1/2 வருடங்கள்
மொத்த அதிபர் சேவை: 20 வருடங்கள்

### இவர் சேவை பாராட்டத்தக்கது



"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃது இலார் தோன்றலில் தோன்றாமை நன்று" எமது அன்பிற்குரிய அதிபர் கு.கதிர்காமசேகரர் அவர்கள் தனது அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெறும் இந்நாளில் அவர்தம் சேவையினைப் பாராட்டிக் கௌரவிப்பது ஒரு சாலச் சிறந்த நிகழ்வாகவே கருதுகின்றேன்.

"கடமையே கண்", "செய்வன திருந்தச் செய்" என்னும் வாக்கினை மெய்ப்பிப்பதாக அமைந்த இவரது கல்விச் சேவை மற்றும் சமூக சேவை மகத்தானதும் பாராட்டத்தக்கதும் மட்டுமல்லாமல் ஏனையோருக்கும் முன்னுதாரணமாக விளங்குவதனைக் காணக் கூடியதாக உள்ளது. இவரது சேவை ஓய்வு பெறுதலுடன் நிறைவு பெறாது தொடர்ந் தும் இப்பாடசாலைக்கும், கல்விச் சமூகத்திற்கும் தேவை என்பதை நினைவுபடுத்த விரும்புவதோடு இவர் மேலும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறேன்.

இ.இளங்கோவன், செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு மாகாண சபை.

### வாழ்த்துரை



அதிபர் திரு. கு. கதிர்காமசேகரர் அவர்கள் ஓய்வு பெறுவதையிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதிபர் அவர்கள் 1972 ஆம் ஆண்டு ஆசிரியராக நியமனம் பெற்ற காலம் தொடக்கம் கல்விக்காக அர்ப்பணிப்புடன் கடமை யாற்றி வந்தவர். அவர் தனது சேவையின் கார ணமாக பதவி உயர்வுகளை உரிய காலத்தில் பெற்று அதிபராக தற்போது ஓய்வு பெறுகிறார். 17 வருடங்கள் ஆசிரிய ராகவும், 20 வருடங்கள் அதிபராகவும் சிறப்பாக செயலாற்றி ஓய்வு பெறுவது பாராட்டுதலுக்குரிய சாதனையே.

அதிபர் ஓய்வு பெற்றாலும் தொடர்ந்து கல்வி வளர்ச்சிக்கு சேவையாற்ற வேண்டும். அவர் தமது வாழ்நாளை குடும்பத்துடன் இனிதே நலத்துடன், நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

கு. சிவபாலன், பாடசாலை வேலைகள் பொறியியலாளர்,
பாடசாலை வேலைகள் பகுதி, யாழ்ப்பாணம்.

### செயல்திறன்மிக்க அதிபர்



தனது முப்பத்தேழு வருட கல்விப் பணியை நிறைவுசெய்து மணிவிழாக்காணும் யா/ மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலய அதிபர் திரு.கு. கதிர்காமசேகரர் அவர்களுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

மணிவிழாநாயகன் சிறந்த கணித, விஞ்ஞான ஆசிரியர் எப்பாடத்தயும் மிக விளக்கமாக மாணவர்களுக்கு புரியும் விதத்தில் கற்பிப்பதில் வல்லவர். சிறந்த நிர்வாகி. தான் நினைத்ததை சாதிக்கும் வல்லமையுடையவர். யாருக்கும் அஞ்சாது கருத்தினை முன்வைக்கும் ஆற்றலுள்ளவர். செயல்வீரன், தென்மராட்சியில் அவர் அதிபராக இருந்த எல்லாப் பாடசாலைகளிலும் தனது திறமையினால் முத்திரை பதித்தவர். அவர் இனிதே வாழ எல்லாம் வல்ல மாவடி விநாயகனை வணங்குகின்றேன்.

திரு.அ.கபிலாயபிள்ளை,
[illegible] தென்மராட்சி
அதிபர் சங்கத் தலைவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### Heartiest Congratulation to our beloved Principal



I count it a great pleasure to have met the Principal of J/ Meesalai Vigneswara Maha Vidyalayam - Mr. Kathirkamasekarar. He has put in much effort to instill Discipline in the Students and is very patient with them. The way he deals with the Students and the care and concern shown for each Student is highly appreciated. His many years of dutiful and faithful service has been appreciated by one and all. I wish him a happy retired life.

*May God bless you.*

*Rev.Johanan D.Philip*
*Executive Pastor, Zion Church Jaffna.*

### வளம்பல பெற்றுக்கொடுத்த அதிபர்



திரு.கு.கதிர்காமசேகரர் தன்னை வளர்த்தெடுத்த மண்ணில் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டிருக்கும் யா/ மீசாலை விக்கினேஸ்வரா ம.வியின் பௌதிக மனிதவள விருத்தியில் அர்ப்பணிப்புடன் சேவை ஆற்றிய அதிபர் என்பது வெள்ளிடைமலை. தான் கடமையாற்றிய சகல பாடசாலைகளிலும் தனது முத்திரையைப் பதித்துள்ளார். அதிபரின் ஆற்றல் முழுவதும் இப் பாடசாலையின் அபிவிருத்திக்கே பயன்படுத்தப்பட்டுள்ளமை, அவரது சொந்தப்பிள்ளைகள் கல்வியில் உயர் தகைமை பெற்றமை எடுத்துக்காட்டாகும். வள்ளுவரின் கூற்றாகிய

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்" என்னும் குறள் மெய்ப்பித்துள்ளது. அதிபர் கு.கதிர்காமசேகரர் தனது ஓய்வுக் காலத்தில் தொடர்ந்தும் கல்விச் சேவையாற்றி சுக நலத்துடன் வாழ எனது வாழ்த்துக்கள்.

வே.தி.செல்வரட்ணம்,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,யாழ்ப்பாணம்.

### வல்லமை வாய்ந்த நல்லாரும் அதிபர்



கடந்த முப்பத்தாறரை ஆண்டுகளுக்கு மேலாக துடிப்பும், துணிவும், செயற்திறனும் மிக்க நல்லாசிரியராக நவிலரும் அதிபராக எல்லோர் நெஞ்சங்களிலும் இடம் பிடித்தவர் தான் திரு.கு.கதிர்காமசேகரர் அவர்கள். எண்ணிய எண்ணியாங்கு எய்தப் பெற்று திண்ணிய திண்ணியவராகத் திகழ்ந்தவர்.

ஆசிரியர் சமுதாயம் சார்பாக, நெகிழ்ச்சி நிலையில் குறைவுடைமை காட்டி, வல்ல பணிபல புரிந்த முறையில், மாணவ சமுதாயம் நல்ல பயன்பல நயந்த வகையில், வல்லமை வாய்ந்த நல்லாரும், அதிபராய் மிளிர்ந்துள்ளார் எனலாம். இன்று ஓய்வதை உவந்து நின்றாலும் கல்வித் துறை சார் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபடவேண்டுமென எல்லாமான இறைவனை இறைஞ்சுகிறேன்

திருமதி அ. வேதநாயகம்,
வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம்.

### காலம் தந்த கல்விச்சுடர்



"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக"

என்ற வள்ளுவன் வாக்கிற்கமைய வாழ்ந்த, வாழ்கின்ற பெருந்தகை அதிபர் திரு.கு.கதிர்காமசேகரர் என்றால் மிகையாகாது. இவர் அதிபர் சேவையில் 1991-1995 வரையான 4 வருடங்கள் யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் பணிபுரிந்தார். நான் அக்காலத்தில் அப் பாடசாலையின் அபிவிருத்திச் சபை செயலாளராக இருந்தேன். அதிபர் அவர்கள் ஒரு தற்துணிவாளர் அதனாற்தான் சொன்னதைச் செய்பவராகவும், செய்யக்கூடியதையே சொல்பவராகவும் திகழ்ந்தார். அச்செயற்பாட்டையே சகலரையும் கடைப் பிடிக்கச் செய்வதில் விடாப்பிடியாக இருந்தார். எனவே தான் கல்வியுலகிலே பல சாதனைகள் படைத்தார்.

அதிபர் ஆற்றிய 36 1/2 வருட கல்விச்சேவை மகத்தானது. அதிபர் அவர்கள் பல்லாண்டு காலம் சகல செல்வ யோகங்களும் பெற்று வாழ இறைவனைவேண்டி, அவரை வாழ்த்துகின்றேன்.

திரு.கா. சிவஞானசுந்தரம், முன்னாள் செயலர்,
பாடசாலை அபிவிருத்திச்சபை,
யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்.

### ஆளுமை மிக்க அதிபர்



மணிவிழாவின் நாயகன் உயர்திரு கு.கதிர்காமசேகரரின் மணிவிழா மலரில் வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டுப் பெருமை கொள்கின்றேன். "புனிதம் மிக்கது ஆசிரியர் சேவை" இதை நன்கு உணர்ந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர் கு.கதிர்காமசேகரர். இவர் ஆளுமை மிக்க தலைவனாக இருந்து எமது பாடசாலையை வழிநடத்தினார். யுத்த சூழ்நிலையால் சிதைவடைந்திருந்த பாடசாலையை இன்று அழகான தோற்றத்திற்குக் கொண்டுவந்ததன் பெருமை இவரையே சாரும்.

இவர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தோடு நன்கு ஒன்றிணைந்து செயற்பட்டவர். இவரது தலைமையில், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராகப் பணிபுரிய வாய்ப்புக் கிடைத்தமைக்கு உண்மையாக நான் பெருமை கொள்கின்றேன். ஓய்வுக்காலத்தில் அவர் தம் குடும்பத்துடன் சிரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.


இ.தேவசகாயம்பிள்ளை,
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்.

# படங்கள் தரும் பதிவுகள்




பசுபிக் ஆசிய மூலவள நிலையத்தினால் சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தின் நிதியுதவியுடன் கடற்றொழிலில் பாதிக்கப்பட்ட ஆனைக்கோட்டை கூழாவடிப் பிரதேச பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பப் பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட வாழ்வாதாரத்திட்டத்தின் கீழ் நல்லின ஆடுகளும், உள்வீடுகளும் வழங்கும் நிகழ்வு கூழாவடி பூங்கா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்ட வலி.தென்மேற்கு முன்னாள் பிரதேச செயலரும் மேலதிக அரச அதிபருமான திருமதி ரூபினி வரதலிங்கம் உரையாற்றுவதையும் மேற்படி நிறுவனப் பிரதிநிதி கான்ஸ் பீற்றர் ஒற்றர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் ''விவேகானந்தர் சொன்ன கதைகள்'' என்னும் நிகழ்வு மேற்படி பாடசாலை அதிபர் ஐயாத்துரை தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சுவாமி சித்ரூபானந்தா தரம் ஐந்து மாணவர்களுக்கு கதை சொல்வதைப் படத்தில் காணலாம்.



வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு உதவும் வகையில் திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினர் முதற்கட்டமாக ஒரு லட்சம் ரூபாவை யாழ்.அரச அதிபர் கே.கணேஷிடம் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம்.



தென்மராட்சிக் கல்வி வலய முறைசாராகக் கல்வி அலகுப் பிரிவினர் நடத்திய கம்பளி நூலில் உடை தயாரித்தல் பயிற்சிநெறியில் கலந்துகொண்ட பெண்களால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி அண்மையில் சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

கண்காட்சியை மேற்படி கல்வி வலய முறைசாராக் கல்வி அலகின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, செயற்றிட்ட அலுவலர் ஏ.சிவரூபன் ஆகியோர் பார்வையிடுவதையும், பயிலுநர்கள் அமர்ந்திருப்பதையும், வித்தியா[illegible] நிற்பதையும் படத்தில் காணலாம். [illegible]




யாழ்.றோட்டறிக் கழகத்தின் மாதாந்த விருந்தினர்தின உரை 'உதயன்' பணிமனையின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக முதலாம் வருட மாணவன் யோ.சுதாகரன் ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்குவதை முதலாவது படத்தில் காணலாம்.

நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்தில் காணலாம்.



மானிப்பாய் அரசினர் வைத்தியசலையின் மகப்பேற்று மனைக்கான புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மேற்படி வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபைச் செயலாளர் பொன். கனகரத்தினம் கட்டடத்துக்கான அடிக்கல்லை நடுவதையும் அருகில் அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்கள், வைத்தியசாலைத் தாதியர்கள், வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அதிகாரி பேரானந்தம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (100)



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரின் மரம்நடுகைத் திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

மந்துவில் றோ.க.த.க. பாடசாலையின் அதிபரிடம் கழகத் தலைவர் லயன் செ.சரவணமுத்து மரக்கன்றுகளைக் கையளிப்பதையும் அருகில் கழக உறுப்பினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (50-207)




யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம் மாதந்தோறும் நடத்தும் கருத்தரங்கு வரிசையில் ''உலகப் பொருளாதார மந்தமும் அதன் தாக்கமும்'' என்னும் தலைப்பில் யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் கருத்தரங்கு இடம்பெற்றது.

நிகழ்வில் பேராசிரியர் வி.பி.சிவநாதன் உரையாற்றுவதையும் அருகில் யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத் தலைவர் ம.வித்தியானந்தநேசன், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், செயலாளர் க.கருணாகரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம கலாசாரப் பேரவையின் வைகாசிப் பெருவிழா அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா உரையாற்றுவதையும் சங்கானை சிவப்பிரகாச மாணவர்களின் குழுப் பாடல் இசைப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.
நடமாட முடியாத ஒருவருக்கு சந்நிதியான் ஆச்சிரம கலாசாரப் பேரவை சார்பாக கலைஞர் எஸ்.சண்முகன் சக்கரவண்டில் ஒன்றை வழங்குவதையும் பார்வைக் குறைபாடு உள்ள ஒருவருக்கு சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய அதிபர் திருமதி சந்திராதேவி யோகேஸ்வரன் கண்ணாடி வழங்குவதையும் ஏனைய இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: சுந்தா).

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன்20

வட்டுக்கோட்டை விசாலாட்சி சமேதகாசி விசுவநாதர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 29ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (204)

* * *

சிறுப்பிட்டி மேற்கு, பெருதலை பார்வதி பரமேஸ்வரன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 7 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

* * *

சங்கானை, அரசடி வைரவப் பெருமான் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204-29)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்20

கோண்டாவில் வடக்கு சாமுண்டாதேவி சமேத ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்20

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலய பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (204-207)

* * *

கொக்குவில் கிழக்கு, கோணாவளை சாயி துர்க்காதேவி ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை காலை 5.53 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி முதல் ஆரம்பமாகும். எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (204-236-207)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்20

சங்கானை பேச்சியம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (204)

* * *

மண்டுவில், ஜூன்20

நுணாவில் மேற்கு பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய அலங்காரத் திருவிழாவும் மணவாளக்கோல நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைகாலை 7 மணிக்கு 108 சங்காபிஷேகமும் பிற்பகல் 2 மணிக்கு சுவாமி திருவீதியுலா வருதலும் இடம்பெறும். (204-59)

* * *

வட்டுக்கோட்டை, சங்கரத்தை- பிட்டியம்பதி பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய வருடாந்த ஆனி உத்தர திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும். (204)

* * *

கோப்பாய் கிழக்கு, ஆசிமட அரசடி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204-72)

## வரணி ம.வியில் 'இசுறு' திட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்20

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த வரணி மகாவித்தியாலயம் கல்வி அமைச்சின் 'இசுறு' திட்டத்தின் அபிவிருத்திகள் மேற்கொள்ளத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனையின் திட்டத்தின் இந்த வித்தியாலயத்தில் 35 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வேலைகளின் முதல் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. ஒவ்வொரு கல்வி வலயத்திலிருந்தும் தலா ஒரு பாடசாலை 'இசுறு' திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (203-207)


## தேவை

மல்லாகம் பழம்பதி பிள்ளையார்
திருமுருகன் கருமாரி தேவஸ்தானம்
மேற்கூறப்பட்டுள்ள தேவஸ்தானத்துக்கு நேர பூசை செய்வதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட அர்ச்சகர் உடன் தேவை.

T.P: 0602212667 (C/559035) ஆதீனகர்த்தா.


## கண்ணீரில் கரைந்த ஓராண்டு நினைவலைகள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 19 . 05 . 1937 |  | 20 . 06 . 2008 |

எங்கள் அன்புத் தெய்வம்

**திருமதி லாசறஸ் பிலோமினம்மா (சேர்மனம்மா)**

"வாழ்நாளில் என்னை நேசித்தோரே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"
அன்பிற்கு ஆசானே! குடும்பத்தின் குல விளக்கே!
அம்மா ஆருயிரே! குழந்தைகள் குமுறுகின்றோம்
அரவணைத்த கரங்கள் அசைவிழந்து போனதேனம்மா?
ஆசைமொழி பயின்ற உதடுகள் மௌனித்ததேனம்மா?
தாலாட்டிட வேண்டும் தாய்மடி எங்கேயம்மா!
செல்வங்கள் நான்கு தொலைவினில் வாழ்ந்திடவே
சொல்லாது மோட்சவாசல் பயணித்ததன் பொருளென்ன
தாயே உம்வதனம் இனிக் காண்பது நிஜமாகுமோ?
கொஞ்சி விளையாடும் உமதன்புப் பேரர்களோ
அம்மா உமக்காய் விநாடிகள் தோறும் புலம்பியழ
மழலைகள் நாம் மௌனித்து நிற்கின்றோமே
இவ்வருடமாம் ஆவணி தனிலே தாயே உமை
நடிபிலி கோலமதில் காண்போமென்றிருந்தோமே
பூச்செண்டுடன் கண்ணீர் சொரியவைத்ததேனம்மா?
மனையாள் உமக்காய் கரம் பிடித்த கணவனோ
இன்று வழிபோரம் விழிவைத்து வாயிலினிலே காத்திட
புன்னகைப் பூவே நீ சென்றவிடம் யாதோ
ஜென்மங்கள் ஆயிரம் புவியினில் மலர்ந்திடினும்
தாயே நீர் எமக்கோர் தெய்வமன்றோ.

(86295)

இவரின் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

இல. 16A, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

## தமிழர் விடுதலைக் கூட்டணி

**2009 ஆம் ஆண்டு யாழ்.மாநகரசபை தேர்தலுக்காக வேட்பாளர் விண்ணப்பம் கோரல்**

யாழ்.மாநகர சபை தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட விரும்பும் எமது கட்சியின் ஆதரவாளர்கள், தொண்டர்கள் ஆண், பெண் இரு பாலாரும் தங்களின் சுயவிவரக் கோவையுடன் எமது யாழ்.மாவட்ட தலைமைச் செயலகத்திற்கு 22.06.2009 பி.ப. 4 மணிக்கு முன்னர் நேரில் சமுகந்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

"தந்தை செல்வா அகம்",
57/48, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இரா.சங்கையா,
தலைவர் வீ.ஆனந்தசங்கரியின்
செயலாளர்.

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 22 ★ 10 ★ 1975 |  | 20 ★ 06 ★ 2003 |

**திருமதி நாமகள் சிவபாலன்**

நீண்ட வாழ்வுதனில் பாதிவழியில்
கனவாகிப் போனீரே
உங்கள் ஆத்ம சாந்திக்கு
எங்கள் குலதெய்வமான
விநாயகனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்
சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

அம்பிகா டிஸ்பென்சரி,
சாவகச்சேரி.

(86299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் பண்ணிசையின் இன்றைய நிலை

சி.கங்கானந்தி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவி (சங்கீதம்).




யாழ்ப்பாண மக்கள் சைவ மக்களாக இருந்தும் பண்ணிசையை விரும்பிக் கற்பதோ, விரும்பிக் கேட்பதோ, பண்ணிசை ஓதுவார் மூர்த்திகளைக் கௌரவிப்பதோ, போற்றுவதோ இன்று யாழ்ப்பாணத்தில் அறவே இல்லை. இதற்கு மாறாக இந்தியாவில் பண்ணிசை ஓதுவார் மூர்த்திகளைப் பெரும் சிறப்பாகப் போற்றுவதிலும், அவர்களுடைய நிகழ்ச்சிகளை அவர் தம் ஒவ்வொரு இல்லத்திலும் நடைபெறும் ஒவ்வொரு மங்கள நிகழ்ச்சிகளுக்கும் அவர்களை வரவேற்று பெருமைப்படுத்துவதுடன், அவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கிறார்கள். தலைசிறந்த முறையில் வெகுமதிகளை வழங்கி கௌரவித்து உபசரிப்பது ஒவ்வொரு குடும்பத்தாரரிடமும் காணப்படுகின்ற உயர்ந்த பண்பாடாக விளங்குகின்றது.

இதனால் தமிழகத்துக் கிராமங்களிலும், சிறிய ஊர்களிலும், பட்டினங்களிலும், நகரங்களிலும், மாநகரங்களிலும் படித்தவர் முதல் பாமரர்கள் வரை தாம் வணங்கும் தெய்வங்களான "தெய்வத் திருமுறைகளை" போற்றுகின்றார்கள். இது தஞ்சை மன்னன் தமிழகத்தில் தமிழிசை வளர்ச்சிக்காக ஏற்படுத்திய பெருமை மாபெரும் புரட்சியே எனலாம். இதுபோன்று நமது நாட்டில் மன்னனில் இருந்து மக்கள் வரை பண்ணிசையைப் போற்றி வழிபடத் தற்காலத்தில் இளம் சமுதாயக் கலைஞர்கள் கற்றவற்றைக் கோயில்களிலும், சிற்றரங்குகளிலும் தங்களுடைய இசை ஆளுமையை வெளிப்படுத்த முன்வரவேண்டும்.

யாழ்ப்பாணம் உட்பட கிழக்கு மற்றும் மலையகம் வரை தமிழர் வாழ்கின்ற அனைத்துப் பிரதேசங்களிலும் மற்றும் ஆங்காங்கேயுள்ள கலாசார நிறுவனங்களிலும், திருக்கோயில்களிலும் பிறகேளிக்கை நிகழ்ச்சிகளை தவிர்த்து இறைவனைப் போற்றி ஏற்றுகின்ற உயிர்க்கும், உடலுக்கும் உறுதி பயக்கின்ற திருமுறைகளைப் போற்றி ஏற்றிடவும், பயிற்றிடவும், மக்கள் அவற்றை உணர்ந்து இன்புறுமாறு கேட்டிட மிகப் பெரிய அளவில் மக்களும், அரசும், பொது நிறுவனங்களும், அநியாயவழியில் பொருளை ஈட்டி இன்பமடைகின்ற வள்ளல்களும் முன்வரவேண்டும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உயர் கலாசார பீடமாக விளங்கும் இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் 1992ஆம் வருடம் ஏற்பட்ட கல்விச் சீர்திருத்தத்தின் பின் பண்ணிசை தனிப்பட்ட துறையாக [BFA Panisai (Hons)] நிறுவப்பட்டு இருந்தும் தலை சிறந்த புகழ்பூத்த ஆசான்கள் இருந்தும் யாழ்ப்பாணத்து மக்கள் 1/100 வீதத்தினர் கூட தங்கள் பிள்ளைகளைப் பண்ணிசை பட்டக்கல்வியைக் கற்க முன்வராதது யாழ்ப்பாணத்து தமிழ் மக்கள் செய்கின்ற துர்ப்பாக்கிய நிலையேயாகும்.

1960ஆம் ஆண்டு சேர் பொன்.இராமநாத வள்ளலின் வேண்டுதல் படி அவருடைய மருகர் [Senatar சு.நடேச பிள்ளை] அவர்கள் இராமநாதன் இசைக் கல்லூரியை ஆரம்பித்தார். அந்தவேளை மாமனாரின் கட்டளைப்படி "திருமுறை சுர மஞ்சரி" என்ற நூலை 1937இல் வெளியிட்டு அந்நூலையே இராமநாதன் இசைக் கல்லூரியில் பண்ணிசை பாட பயிற்சி நூலாக ஏற்பாடு செய்துள்ளார்.

[தொடரும்]

## வார வசந்தம்

# மண்மூடும் சுவடுகள்

ந.சத்தியபாலன்



பாடசாலையொன்றின் மாணவர்கள், ஆசிரியர்களை ஏற்றிக்கொண்டு அந்தத் தனியார் வாகனம் சட்டநாதர் கோயிலின் அருகே வந்து நின்றது. வெகு உற்சாகமாக அந்த மாணவர்கள் பஸ்ஸிலிருந்து இறங்கினார்கள்.

"பிள்ளையள் முதலில் சட்டநாதர் சிவன்கோயிலைக் கும்பிட்டுக்கொண்டு பிறகு மற்ற இடங்களைப் பார்க்கப் போவம். கோயில் கிணத்தில காலைக் கழுவிக்கொண்டு போவம். சரியா..." என்றபடி முத்துமணி ரீச்சர் முன்னே நடந்தார்.

பிள்ளைகளை வரிசையாய் அழைத்துக்கொண்டு நாகலிங்கம் மாஸ்ரர் கூடவே போனார்.

கோயிலின் உட்புறத்தில் நுழையும்போதே, "அந்தக்காலத்தில் கோயில் வாசல் ரெண்டு பக்கமும் செங்கட்டி நிறத்தில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தது. நெடுங்காலமாய் நிறம் மங்காமல் அழகாய்த்தான் இருந்தது அந்த ஓவியங்கள். பிறகு வந்த கோயிற் பரிபாலனங்கள் வடிவாக்கிறம் எண்டு அந்த ஓவியங்களை அழிச்சுப்போட்டு இப்பிடி ஆக்கிவைச்சிருக்கினம். பழைய வரலாற்றுக் கால ஓவியங்களின் அருமை அவையளுக்குத் தெரியாமல் போச்சு. இப்பிடிக் கனக்க... சங்கிலிய மன்னன் காலத்து ஓவியங்கள் கட்டடங்கள் பல மறைஞ்சும் இடிஞ்சும் போச்சுது..." என்று விளக்கம் தந்தார் வரலாற்று ஆசிரியர் குமாரவேல்.

"சரியாச் சொன்னீங்கள் சேர் புராதன கால விஷயங்களைப் பேணிப் பாதுகாக்கிற தன்மையளே எங்கட ஆக்களிட்ட இல்லை. இதுவே தெற்கில் ஒரு இடமாய் இருந்தால் எவ்வளவு பக்குவமாய்ப் பேணி இருப்பினம்...? என்றார் ரேவதி ரீச்சர்.

"சங்கிலியன் அரண்மனையைப் பார்க்கப் போவமா சேர்" என்றான் பையன்களில் ஒருவன். உண்மையில் அது சங்கிலியன் அரண்மனையா அல்லது மந்திரி மனையா என்று தெரியேல்ல. மந்திரி மனை என்றும் சொல்லுறவை" என்றார் ஓர் ஆசிரியர். எல்லோரும் அதைப் பார்க்கப் புறப்பட்டார்கள்.

பார்த்துவிட்டுத் திரும்பும்போது பலரும் வியப்போடு பேசினார்கள். "அந்தக் காலத்தில இப்பிடி ஓர் அமைப்பு இருந்திருக்கு என்று அறிய ஆச்சரியமாத்தான் இருக்குது" என்றாள் ஒரு மாணவி.

"இந்த ஆச்சரியம் நீடிக்கப் போறது எவ்வளவு காலம் எண்டதுதான் கேள்வி. எங்களின்ர ஆக்களுக்கு எங்கட புராதனப் பெருமையள் பற்றி அக்கறையில்லை. இப்பிடிக் கட்டடங்கள் மட்டுமல்ல அந்தக் காலத்துத் தளபாடங்கள், பாத்திரங்கள் எதிலும் இருக்கிற தனித்தன்மையை ஆரும் நினைச்சுப் பாக்கிறதில்ல" என்றார் குமாரவேல் மாஸ்ரர்.

இனிப் பாதையும் திறக்கப்போகினம். அங்கத்தைய ஆக்கள் சுற்றுலா என்று வந்தால் இதையெல்லாம் பார்க்க வருவினம். அந்தச்சனம் எங்கட 'கலை உணர்வு' பற்றி என்ன நினைக்கும் என்றாள் ஒரு மாணவி. கலை உணர்வோ... அதையெல்லாம் ஆர் பார்க்கிறது... "காசு மட்டும்தான் என்றும் நிலைச்சிருக்கப் போகுது என்றபடி யமுனா ஏரியைப் பார்க்கப் பிள்ளைகளைத் தயாராக்க முனைந்தார் முத்துமணி ரீச்சர்.

# கீரை வகைகளின் மருத்துவ மகத்துவங்கள்

வ.க.ஜெயபாலன்
யாழ்ப்பாணம்.

(இதன் முதற் பகுதி கடந்த வார உதயனில் வெளியாகியிருந்தது)

* **முடக்கற்றான்:** இதனை ரசம் வைத்துக் குடிக்கலாம். கேழ்வரகு மாவுடன் கலந்து தோசை செய்தும் உண்ணலாம். குறைந்த அளவு புளி கலந்து குழம்பு வைத்தும் உண்ணலாம். வாய்வு பிடிப்பு, பித்தம், வாதநோய், கை கால் மூட்டுவலி, சலரோகம், மூலம், இருமல் கீழ்வாதம், சொறி, முடக்குவாதம் குணமாகும்.

* **குப்பைக் கீரை:** இது வயல் வெளிகளிலும் குப்பை மேட்டிலும் தானாகவே வளரும். மிகவும் ருசியாக இருக்கும். முளைக் கீரையைப் போன்று காணப்படும். பொதுவாக நன்மை தரும் கீரையாகும்.

* **சிறுகீரை:** கோடை காலங்களில் இக்கீரையை தினமும் உண்ணலாம். சிறுநீர் நன்கு வெளியேறும். உடல் வெப்பத்தைத் தணித்துக் குளிர்ச்சியை உண்டாக்கும். காசநோய் தீரும். உடலுக்கு நல்ல சக்தியைக் கொடுக்கும். போக ஆசையைத் தூண்டும்.

* **பசளைக் கீரை:** சிவப்பு, பச்சை நிறங்களில் காணப்படும். கொடிபோல் படரும். குளிர்ச்சியுண்டாக்கும். சிறுநீர் பெருகும். மலச்சிக்கல் தீரும். தாகம், வாந்தி, வெள்ளை ஒழுக்கு, மூத்திரக்கடுப்பு, சொறி, சிரங்கு குணமாகும். வலி, வீக்கம் உள்ள இடங்களில் அரைத்து கனமாகப் பூசி கட்டுப்போட குணமாகும்.

* **பொன்னாங்கண்ணி:** கண்களுக்கு அனைத்துவகை நன்மைகளையும் கொண்ட கீரை வகைதான் இப்பெயர் பெற்றது. பொதுவாக உடலுக்கு நன்மை பயக்கும். இது சிறந்த காய கற்ப மூலிகையாகும். கண்பார்வை, காது, தொண்டை, மூக்கு ஆகியவற்றின் நோய்கள் மூலம் ஈரல் நோய்கள், கைகால் எரிவு, வாய் நாற்றம், வயிறு எரிச்சல் விலகும். உடலுக்கு அழகைக் கொடுக்கும். நீண்ட ஆயுளை உண்டாக்கும். உடல் பொன்நிறம் காணும். இதில் தங்கச்சத்து உள்ளதாகச் சித்தர்கள் கூறுகின்றார்கள்.

* **முருங்கைக் கீரை:** இது சாமான்ய மக்களின் கீரையாகும். உடலுக்கு நல்ல உரம் தரும். மந்தம், சூடு, தலைவலி, கண்நோய், பித்தம், மாந்தம் செரியாமை, கபம், காசம், மூட்டுவலி, பல்நோய், இரத்தச்சோகை தீரும். கண்குளிர்ச்சி உண்டாகும். சுக்கிலம் கெட்டியாகும். இலைச்சாற்றை காதில்விட காதுவலி தீரும். கட்டி புண்கள், வலி வீக்கம் இவைகளுக்கு அரைத்துப் பத்துப் போடலாம். முருங்கைப்பூ இதயநோயைப் போக்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடாநாட்டில் காசநோய் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்குகள் மற்றும் ஊர்வலங்கள் இடம்பெற்று வருகின்றன. அண்மையில் சித்தங்கேணி பொதுசுகாதாரப் பிரிவில் காந்தி ஸ்ரீ முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் இணைந்து நடத்திய விழிப்புணர்வு ஊர்வலத்தை முதலாவது படத்திலும், பனிப்புலம் 'கிராமத்தில் சிறிமுருகன் முன்பள்ளி , அம்பாள் முன்பள்ளி மாணவர்கள் இணைந்து நடத்திய காசநோய் விழிப்புணர்வு ஊர்வலத்தை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: நந்தன்)

# 13ஆவது திருத்தச் சட்டத்திலிருந்து அரசு ஒருபோதும் பின்வாங்காது

## அதுதான் அரசியல் தீர்வு என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூன் 20

13ஆம் திருத்தச் சட்டத்தை அரசில் உள்ளவர்கள எதிர்த்தாலும் கூட அத் திருத்தச் சட்டத்தை தேசிய பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக முன்வைப்பதிலிருந்து அரசு ஒருபோதும் பின்வாங்காது என்று அரசு நேற்றுமுன்தினம் தெரிவித்தது.

வடக்கின் நிலைமை வழமைக்குத் திரும்பியதும் அங்கு இத்திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவே இதைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

13 ஆம் திருத்தச்சட்டம் தொடர்பாக எவருக்கும் கருத்துத் தெரிவிக்கும் உரிமையுண்டு. அதை எதிர்க்கவும் முடியும். அரசில் உள்ளவர்கள் கூட 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பாகப் பல்வேறுபட்ட கருத்துக்களை முன்வைக்கின்றனர். எதிர்க்கின்றனர்.

யார் எப்படிப்பட்ட கருத்துக்களை முன்வைத்தாலும் தேசியப் பிரச்சினைக்கான தீர்வாக 13 ஆம் திருத்தச்சட்டத்தை முன்வைப்பது என்ற அரசின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமுமில்லை.

13 ஆம் திருத்தச்சட்டம் எமது அரசியல் யாப்பில் உள்ள ஒரு சட்டம். அதை நாடாளுமன்றம் அங்கீகரித்துள்ளது. வடக்குத் தவிர்ந்த அனைத்து மாகாணங்களிலும் அது நடைமுறையில் உள்ளது. அந்தத் திருத்தச்சட்டத்தால் எந்தப் பிரச்சினையுமில்லை.

நாம் இறுதியாகக் கிழக்கில் கூட அதை நடை முறைப்படுத்தியுள்ளோம். தேசியப் பிரச் சினைக்கு 13 ஆம் திருத்தச்சட்டம் நல்ல தொரு தீர்வு என்பது உண்மையாகிவிட்டது. அப்படி இருக்கும்போது இதை விடுத்து வேறொருதீர்வைத் தேடும் தேவை எமக்கில்லை.

13 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் வருகின்ற காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில்தான் நாம் ஓர் இணக்கத்திற்கு வரவில்லை. இவை எதிர்காலத்தில் பேசித் தீர்க்கப் படலாம்.

இந்த இரண்டு அதிகாரங்கள் தொடர்பில் எம்மிடையே இழுபறி நிலை உள்ளபோதிலும் 13 ஆம் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எந்த இழுபறியும் கிடையாது.

வடக்கின் நிலைமைகள் வழமைக்குத் திரும்பியதும் அங்கு 13 ஆம் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (த- 07)


## தவறிவிட்டது

ஆவரங்கால் மேற்கு, புத்தூர் என்னும் முகவரியுடைய வேதக்குட்டி குருக்கள் தியாகராசா சர்மா (441731655V), தியாகராசா கோகிலராணி (548423058V) ஆகியோரின் தேசிய அடையாள அட்டை மற்றும் NPMH 6969 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் அடங்கிய பிரயாணப் பை 18.06.2009 அன்று சுன்னாகத்திற்கும் புத்தூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சுன்னாகம் தம்பிராசா மருந்துக்கடையில் அல்லது யாழ்ப்பாணம் சோதி புடைவைக் கடையில் ஒப்படைக்கவும்.

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

வலிகாமம் மேற்கு பிரிவு (சங்கானை)
புற்றுநோயாளர்களின்
உதவு நிதிக்காக நடத்தும்

## மாபெரும் கலை விழா

இடம்: யா/ வட்டு. மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை.
காலம்: 21.06.2009 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 1.00 மணி
தலைவர் : திரு.தி.உ தயாசூரியன் J.P.
(தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வலி.மேற்குப் பிரிவு)
புற்று நோயாளர்களின் உதவு நிதியை மேம்படுத்த அனைவரினது பூரண ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதுடன் கலை நிகழ்வைக் கண்டுகளிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
மண்டப நுழைவாயிலிலும் ரிக்கெற்றுக்களை பெற்றுக்கொள்ளலாம்.
பிரவேசம்: ரூபா 200, ரூபா 100, ரூபா 50
நிர்வாகம்


## மரண அறிவித்தல்

### பாக்கியநாதர் ஞானமலர்



வயாவிளானைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டபாக்கியநாதர் ஞானமலர் 18.06.2009 வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாக்கியநாதர் எலிசபேத் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பற்றிக் ஆனந்தராசா (அவுஸ்திரேலியா), மரியராசா மற்றும் அல்பிறட் யோசப், புனிதமலர், சொர்ணமலர், யோன்பொஸ்கோ (அவுஸ்திரேலியா), சகாயராசா (சில்லாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.06.2009) சனிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சில்லாலை சேமக்காலையில் அடக்கம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை
தொ.பே: 0778037835

தகவல்: பா.சகாயராசா (சகோதரன்)

## 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



மலர்வு 22.10.1946

உதிர்வு 21.05.2009

### திருமதி இராஜேஸ்வரி இந்திரன்

உள்ளத்தால் உயர்வாகி வாழ்விற்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும் எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

எங்கள் அன்புத் தெய்வமே! உங்களின் மறைவுச் செய்திகேட்டு நாங்கள் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம். உங்களின் பிரிவு உயிர் உள்ளவரை எம் உள்ளத்தை வாட்டிக் கொண்டே இருக்கும்.

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து எமக்கு நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவரின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (20.06.2009) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
பிள்ளையார் கோவிலடி, தாவடி.

இ.இந்திரன்
சகோதர சகோதரிகள்.

## முதியோருக்கு உதவுதொகை

யாழ்ப்பாணம், ஜூன் 20

சமூக சேவைகள் திணைக்களத்திற்கு சுயதொழில் உதவிகோரி விண்ணப்பித்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 5 முதியவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படவுள்ளன.

தலா 3 ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்குவதற்கான கொடுப்பனவுப் பட்டியல் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளது.

சுயதொழில் உதவி கோரி விண்ணப்பித்த முதியவர்கள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (203-201)


## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகர எல்லைக்குள் குறைந்தது 5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. இணைந்த குளியல் அறையும் விசாலமான முற்றமும் இருப்பது வரவேற்கத்தக்கது.
தொடர்பு: 0773865475


## கண்ணீர் அஞ்சலி



### அமரர் சந்தியாப்பிள்ளை மரியாம்பிள்ளை J.P. (குணம்)

யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையின் நிர்வாகசபை உறுப்பினராக நீண்டகாலம் பணியாற்றி பேரவையின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவிருந்து அமரத்துவமடைந்துவிட்ட அமரர் மரியாம்பிள்ளைக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

(86367)


PANDA Express UNIVERSAL COURIER
No 167, Kasthuriyar Rd, Jaffna. (Computer Express Building)
Phone : 021 222 8250

யாழ்நகரில் இருந்து சர்வதேச ரீதியாக இருக்கும் உங்கள் உறவுகளிற்கு வேண்டிய ஆவணங்கள், பொதிகள் என்பவை மிகக் குறைந்த கட்டணத்தில் உலகின் எந்தநாட்டிற்கும் பாதுகாப்பாகவும் விரைவாகவும் அனுப்பிவைக்கப்படும்
PANDA
கீழ்குறிப்பிடப்பட்ட இடங்களில் உங்கள் பொதிகள், ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

Head Office
PANDA EXPRESS,
No.30-1/20, W.E.De Silva Mw.
Colombo-06
0112500207

Jaffna Office
Computer Express
No-167, Kasthuriyar Rd,
Jaffna.
021 222 8250

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

ஒருவாரகால முழுநேரகற்கைநெறிகள்.

Diploma in Graphic Designing
Adobe Photo shop+Corel Draw
Macro Media Flash+Cool 3D Studio

Diploma in Hardware Engineering
Assembling+Upgrading+Troubleshooting+Repairing
Servicing+Software Installation+Config Networking Ect..

Diploma in Video Editing
Adobe Photoshop+Cool 3D Studio+VCD cutter
Capturing+Pinnacle Studio+Adobe premeir

வகுப்புக்கள் ஆரம்பம்:- 22.06.2009 9.00Am


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியாவின் ஏவுகணைத் தாக்குதல்களை எதிர்கொண்டு முறியடிக்க அமெரிக்கா தயார்

## வாஷிங்ரன் பாதுகாப்புச் செயலர் கூறுகிறார்

வாஷிங்ரன், ஜூன் 20

''வடகொரியாவின் ஏவுகணைத் தாக்குதல்களிலிருந்து தனது எல்லையை பாதுகாப்பதற்கான நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. அதேவேளை, எத்தகைய தாக்குதலையும் முறியடிக்கக் கூடிய நல்ல நிலையிலும் அமெரிக்கா உள்ளது'' என அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் ரொபர்ட் கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

ஹாவாயை நோக்கி ஏவுகணையொன்றை செலுத்த வடகொரியா திட்டமிட்டுள்ளது என வெளியான தகவலையடுத்து, ரொபர்ட் கேட்ஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

''ஹவாய் வழியாக மேற்குலகை நோக்கியும் வடகொரியா ஏவுகணையைச் செலுத்தக்கூடும். இது தொடர்பாகவும் நாம் முன்னெச்சரிக்கையுடன் இருக்கின்றோம்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''இத்தகைய தாக்குதலை முறியடிப்பதற்கு ஏதுவாக ஏவுகணைகளை நிறுத்தி வைப்பதற்கும், ரேடர் கருவியை நிறுவுவதற்கும் அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது'' என்றும் ரொபர்ட் கேட்ஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

மே 25 ஆம் திகதி, வடகொரியா நிலத்துக்கடியில் அணுகுண்டு சோதனையொன்றை நடத்தியது. அதையடுத்து, அடுத்தடுத்து குறுகிய தூர ஏவுகணை சோதனைகளையும் நடத்தியது.

சர்வதேச சமூகத்தின் எச்சரிக்கையையும் மீறி சோதனைகளை நடத்தியமைக்காக, வடகொரியாவுக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபை, இறுக்கமான தடைகளை விதித்துள்ளது.

அதேவேளை, தனது அணுத்திட்டங்கள் தொடர்பாக, பேச்சுகள் நடத்துவதற்காக வருமாறு வட்கொரியாவுக்கு ரஷ்யாவும், சீனாவும் வியாழக்கிழமை கூட்டாக அழைப்பு விடுத்தன.

வடகொரியா தனது பக்கத்து நாடுகளான தென்கொரியா, ஜப்பான் ஆகியவற்றை அச்சுறுத்தி வருகிறது. தென்கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளது. இதனால் அமெரிக்காவையும் மிரட்டி வருகிறது.

இந்நிலையில், வடகொரியா ஏராளமான ஆயுதங்களை குவித்து வருகிறது. ஏற்கனவே, அணுகுண்டு தயாரித்து சோதனை நடத்தியது. 2 ஆவது தடவையாக 3 வாரங்களுக்கு முன்னர் அணுகுண்டு சோதனை நடத்தியது. இதேபோல கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனைகளையும் நடத்தியது.

சர்வதேச நாடுகளின் எச்சரிக்கையையும் மீறி தொடர்ந்து ஆயுத சோதனை நடத்திவரும் வடகொரியா மீண்டும் அணு குண்டு சோதனைக்கும், ஏவுகணை சோதனைக்கும் தயாராகி வருகிறது என்றும் கூறப்படுகிறது.

இந்த சோதனைகள் முடிந்ததும் வடகொரியா, தென்கொரியா மீது தாக்குதல் நடத்த வாய்ப்பு உள்ளது என கூறப்படுகிறது. அப்படி தாக்குதல் நடத்தினால், தென்கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்காவும் போரில் குதிக்கும்.

''அமெரிக்கா எங்கள் மீது தாக்கினால், அதற்கு ஆயிரம் மடங்கு பதிலடி கொடுப்போம்'' என வடகொரியா எச்சரித்துள்ளது.

வடகொரியாவிடமுள்ள ஏவுகணையால் அமெரிக்காவின் அலாஸ்கா பகுதியை தாக்க முடியும். அப்படி தாக்கினால், நடுவானிலேயே அந்த ஏவுகணையை தாக்கி அழிக்க அமெரிக்கா தயாராகி வருகிறது.

இதற்காக அமெரிக்கா எதிர்ப்பு ஏவுகணைகளை அலாஸ்கா பகுதிகளில் பொருத்தி வருகிறது. இந்த ஏவுகணைகளை ரேடர் மூலம் எதிரில் வரும் ஏவுகணைகள் துல்லியமாக கண்டறிந்து தாக்கி அழித்துவிடும்.

இதற்கிடையே வடகொரியா, தென்கொரியா மீது விஷவாயு குண்டுகளை வீச தயாராக உள்ளது என அமெரிக்க புலனாய்வு அமைப்பான திஸ்டாங் கூறியுள்ளது.



ஸ்பெயினின் வட நகரான பில் பாவோவில் நேற்று வெள்ளிக்கிழமை கார்க் குண்டொன்று வெடித்தது. இதில் ஒருவர் கொல்லப்பட்டார். ஏழு பேர் காயமடைந்தனர். குண்டுவெடித்த இடத்தில் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டிருந்தபோது...

# நடுவானில் விமானி திடீர் மரணம்! 247 பயணிகள் பத்திரமாக தரையிறக்கம்

## உதவி விமானிகள் சாதுரியம்

நியூயோர்க், ஜூன் 20

247 பயணிகளுடன் விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது, அதை இயக்கிய விமானி திடீரென்று மரணம் அடைந்தார். எனினும், துணை விமானிகள் விமானத்தை பத்திரமாக தரை இறக்கினார்கள்.

பெல்ஜியத்தின் தலைநகரான பிரசல்ஸிலிருந்து அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்திலுள்ள நெவார்க் நகரைநோக்கி, வியாழக்கிழமை கொண்டினென்டல் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் விமானமொன்று புறப்பட்டது. போயிங் ரகத்தைச் சேர்ந்த அந்த விமானத்தில் 247 பயணிகள் இருந்தனர்.

விமானம் அட்லாண்டிக் கடலுக்கு மேலே நடுவானில் பறந்து கொண்டிருந்த போது, அதை ஓட்டிச் சென்ற விமானி திடீரென்று மரணம் அடைந்தார். எனினும், விமானத்தில் அவருக்கு உதவியாக இருந்த மற்ற 2 துணை விமானிகளும் விமானத்தை ஓட்டிச் சென்று நெவார்க் லிபர்டி சர்வதேச விமான நிலையத்தில் பத்திரமாக தரை இறக்கினார்கள். இதனால், அதிலிருந்த 247 பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்கள்.

விமானத்தில் மரணம் அடைந்த விமானிக்கு 61 வயது. நெவார்க் நகரத்தைச் சேர்ந்த இவர் விமானி தொழிலில் 20 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் பெற்றவர். இவர் இயற்கை மரணம் அடைந்துள்ளார் என கொண்டினென்டல் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் கெல்லி கிரிப் தெரிவித்தார்.

விமானம் தரை இறங்கும் வரை, இதிலிருந்தப் பயணிகளுக்கு விமானியின் மரணம் தொடர்பாக அறிவிக்கப்படவில்லை. விமானத்தில் டாக்டர்கள் யாராவது இருந்தால் விமானியின் அறைக்கு வருமாறு விமானத்தில் அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, விமானத்திலிருந்த டாக்டர்கள் சிலர் விமானியின் அறைக்குச் சென்றனர். எனினும், விமானி இறந்தது பற்றி பயணிகளுக்குத் தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

விமானம் தரை இறங்கியப் போது நெவார்க் விமான நிலையத்தில் அவசரகால பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

# இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஒபாமா நிர்வாகம் ஆர்வம்

வாஷிங்ரன், ஜூன் 20

இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஒபாமா நிர்வாகம் ஆர்வமுடன் உள்ளது என வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

வாஷிங்ரனில் அமெரிக்கா, இந்தியா தொழில் குழுவின் மாநாட்டில் புதன்கிழமை கலந்துகொண்ட அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

''முக்கியத்துவம் வாய்ந்த இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்ற அமெரிக்க அரசு ஆர்வத்துடன் உள்ளது. இது இரு தரப்பு உறவில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஒப்பந்தமாகும்.

''இந்தியாவின் அணுசக்தித் திட்டங்கள் எந்த அளவில் உள்ளன என்பதை அறிந்து கொள்ள அமெரிக்கா ஆர்வமுடன் உள்ளது. இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும்போது இரு நாடுகளுக்குமிடையிலான உறவு மேலும் வலுப்படும்.

''இந்தியாவுடன் பொருளாதாரம், தொழில்நுட்பம் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் இணைந்து செயற்பட ஒபாமா நிர்வாகம் ஆர்வமுடன் உள்ளது. கடந்த காலங்களில் இருந்ததைவிட அமெரிக்காவும், இந்தியாவும் தற்போது மிகவும் நெருங்கி வந்துள்ளன.

''எதிர்வரும் காலத்தில் நெருக்கம் மேலும் அதிகரிக்கும். அணுசக்தி ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளுக்கிடையே இருந்து வந்த பல்வேறு தடைகள் நீக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தகவல் தொலைத் தொடர்புத்துறையில் தொழில்நுட்ப உதவி, வானிலை ஆராய்ச்சி ஆகியவை உள்ளிட்ட துறைகளில் இந்தியாவுக்கு அமெரிக்காவின் உதவி கிடைக்கும்.'' ஹிலாரி கிளின்ரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

# அல்ஜீரியாவில் தீவிரவாதிகள் தாக்குதல்; துணைப்படை சிப்பாய்களில் 24 பேர் பலி!

அல்ஜியர்ஸ், ஜூன் 20

அல்ஜீரியாவின் தலைநகரான அல்ஜியர்ஸுக்கு கிழக்கேயுள்ள மன்சோயூறா நகருக்கருகில் துணைப்படையினர் மீது இஸ்லாமியத் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 24 சிப்பாய்கள் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தனர் எனப் பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

நெடுஞ்சாலை நிர்மாணத்திட்டமொன்றுக்கு சீன ஒப்பந்தக்காரர்களையும் தொழிலாளர்களையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்ட வாகன அணிக்கு, இப்படையினர் பாதுகாப்பு அளித்து வந்தனர். எனினும், சோயூறாவுக்கருகில் இவர்கள் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகினர் என்றும் அது குறிப்பிட்டது.

தலைநகரான அல்ஜியர்ஸுக்கு கிழக்கே, 200 கிலோ மீற்றர் (124 மைல்) தொலைவில் நெடுஞ்சாலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரு குண்டுகள் வெடித்தன. அதே தருணத்தில், வாகன அணியை நோக்கித் தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கினார்கள் என நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டார்கள்.

''துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு ஆறு வாகனங்களில் ஏறி இத்தீவிரவாதிகள் தப்பிச் சென்றுவிட்டார்கள். காயமடைந்த சிப்பாய்கள் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்'' என்றும் அவர்கள் கூறினார்கள். எனினும், சீனத் தொழிலாளர் தரப்பு சேத விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை.

1990 ஆம் ஆண்டு அல்ஜீரியாவில் தலைதூக்கிய சிவில் யுத்தத்தில் சம்பந்தப்பட்ட பலரும் இந்த இஸ்லாமிய தீவிரவாத அமைப்பில் இணைந்துள்ளார்கள். இந்த அமைப்பு ஒசாமா பின்லேடனின் அல் - குவைதா அமைப்புடன் தொடர்புடையது.

அல்ஜீரியாவில் மே மாதப் பிற்பகுதியிலும், இஸ்லாமிய தீவிரவாதிகளால் ஐந்து துணைப்படைச் சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். ஒரு வாரத்துக்குப் பின்னர் ஒன்பது இராணுவச் சிப்பாய் கள் இத்தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள்.

தலைநகரான அல்ஜியர்ஸிலிருந்து கிழக்கு நோக்கி, மலைப் பிராந்தியங்களுக்கூடாகச் செல்லும் நெடுஞ்சாலைகள் ஆபத்தானவை. இம் மலைப் பிராந்தியங்களே இஸ்லாமிய தீவிரவாதிகளின் பாதுகாப்பு அரண்களாக உள்ளன என கெய்ரோவிலுள்ள பி.பி.ஸி. நிருபர் கிறிஸ்டின் பிரேஸர் தெரிவித்தார்.

## உலக அரங்கில்



பிரசல்ஸில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமான ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களின் இரண்டு நாள் உச்சிமாநாட்டில் ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மேர்கெலும், பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் [illegible]

# ஏடன் வளைகுடாவில் படகு விபத்து; 18 பேர் பலி; 46 பேரைக் காணவில்லை

மொகடிஷ்ஷு, ஜூன் 20

சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஏற்றிக்கொண்டு, சோமாலியாவிலிருந்து ஏமனை நோக்கி வந்த படகொன்று, ஏடன் வளைகுடாவில் கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானது. இதில் 18 பேர் பலியாயினர் 46 பேர் காணாமற்போய்விட்டனர் என அகதிகளுக்கான ஐ.நா. முகவர் நிறுவனம்தெரிவித்தது.

சோமாலியாவிலிருந்து வியாழக்கிழமை 11 ஆம் திகதி, 88 சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுடன் இப்படகு ஏமனை நோக்கிப் புறப்பட்டது. எனினும், காலநிலை சீர்கேட்டாலும், கடுங் காற்றாலும் திங்கட்கிழமை [illegible] மூழ்கியுள்ளது என்றும் [illegible] நிறுவனம் குறிப்பிட்டது.

24 பேர் கரை சேர்க்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காணாமற் போனோர் மூழ்கி மரணித்திருப்பர் என அஞ்சப்படுகிறது. காலநிலை சீரற்றிருப்பதால், தேடுதல், மீட்புப் பணிகள் துரிதமடையவில்லை என்றும் ஐ.நாவின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் குறிப்பிட்டது.

ஏமனை நோக்கி, பாதுகாப்பற்ற படகுகளில் வரும் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளில் நூற்றுக்கணக்கானோர் வருடாந்தம் படகு விபத்துகளில் சிக்கி பலியாகி விடுகின்றனர். இவர்கள் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களாவர் என இந்நிறுவன அதிகாரியொருவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர் தாயகப் பகுதியிலிருந்து இராணுவத்தை திரும்பப் பெற இலங்கையை வலியுறுத்துக!

## மத்திய அரசிடம் விஜயகாந்த் வேண்டுகோள்



சென்னை, ஜுன் 20

தமிழர் பகுதிகளிலிருந்து இலங்கை இராணுவத்தை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும் என்றும், தமிழர்கள் தங்களுடைய சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்ல வழிவகை செய்ய வேண்டும் என்றும் இலங்கை அரசை இந்திய அரசு கடும் தொனியில் வற்புறுத்த வேண்டும்.

இவ்வாறு தேசிய முற்போக்கு திராவிட கழக தலைவர் விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையால் அனுமதி மறுக்கப்பட்டு நடுக்கடலில் நிறுத்தப்பட்டுள்ள கப்பலில் இருக்கும் நிவாரணப் பொருள்களை இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியத் தூதரின் மேற்பார்வையில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் சுமார் 3 லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் ஆடு, மாடுகளைப் பட்டியில் அடைத்து வைத்திருப்பதைப்போல இலங்கை இராணுவக் காவலிலுள்ள முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மனிதாபிமான அடிப்படையில் இவர்களுக்கு உதவ வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகளை சேர்ந்த தமிழர்களும், அங்குள்ள மனிதாபிமானிகளும் தங்களால் இயன்ற உதவிப் பொருள்களை சேர்த்து 'மெர்சி மிஷன்' என்ற கப்பல் மூலம் அவசர உதவிக்காக இலங்கைக்கு அனுப்பி வைத்தனர். சில ஆவணங்கள் சரியில்லை என்று வேண்டுமென்றே சாக்குபோக்குச் சொல்லி இந்த நிவாரணக் கப்பலுக்கு அனுமதி மறுத்து திருப்பி அனுப்பிவிட்டது.

இந்த நிவாரணக் கப்பல் இன்னும் நடுக்கடலிலேயே காத்துக்கொண்டுள்ளது. தமிழக அரசு இதில் தலையிட்டு இந்திய அரசின் மூலம் நடுக்கடலில் நிற்கும் நிவாரணக் கப்பலை இந்தியத் துறைமுகத்தில் உணவு, மருந்துப் பொருள்களை இறக்க வசதி செய்துகொடுக்கவேண்டும்.

பின்னர் அவற்றை செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் மூலம் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு இந்தியத் தூதரின் மேற்பார்வையில் விநியோகிக்க வேண்டும்.

முகாம்களில் திறந்த சிறைச்சாலையை விட மோசமான நிலையில் அடைபட்டு கிடக்கும் தமிழர்கள் உணவு மற்றும் சுகாதார வசதியில்லாததால் தினந்தோறும் செத்து மடிகிறார்கள். இதைத் தவிர்க்கும் வகையில் இலங்கையில் உள்ள தமிழர் பகுதிகளிலிருந்து இலங்கை இராணுவத்தை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும் என்றும், தமிழர்கள் தங்களுடைய சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பிச்செல்ல வழிவகை செய்ய வேண்டும் என்றும் இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும் - என்றுள்ளது.

# இந்தியாவில் 35 பேருக்கு பன்றிக்காய்ச்சல் தொற்று

## அமைச்சர் ஆசாத் தெரிவிப்பு

புவனேஸ்வர், ஜுன் 20

இந்தியாவில் 35 பேருக்கு மட்டுமே பன்றிக் காய்ச்சல் உள்ளது. இதிலும் 12 பேர் வீடு திரும்பி விட்டனர். பன்றிக் காய்ச்சல் நோய் தீர்க்கப்படும் வரை தேவையில்லாமல் அமெரிக்கா உட்பட வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டாம் - என்று மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் ஒரிசா மாநிலம் புவனேஸ்வரில் நேற்றுமுன்தினம் அவர் அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு -

பன்றிக் காய்ச்சல் நோய் குறித்து பீதியடையத் தேவையில்லை. அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளால் பன்றிக் காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. விமானம் மற்றும் கப்பல் மூலம் வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் கடுமையான பரிசோதனைக்குப் பிறகே அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்தியாவில் 35 பேருக்கு மட்டுமே பன்றிக் காய்ச்சல் உள்ளது. இதிலும் 12 பேர் வீடு திரும்பி விட்டனர். பன்றிக் காய்ச்சல் நோய் தீர்க்கப்படும் வரை தேவையில்லாமல் அமெரிக்கா உட்பட வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டாம் என்று மக்களை கேட்டுக் கொண்டுள்ளோம் - என்றார்.

# எல்லையில் மீன்பிடிக்கும் மீனவரைக் கூட தாக்கி வருகின்றது இலங்கைக் கடற்படை

## அ.தி.மு.க. சீற்றம்

சென்னை, ஜுன் 20

இந்திய எல்லைப் பகுதியில் மீன் பிடிக்கும் மீனவர்களை கூட இலங்கைப் படையினர் தாக்கி வருகிறார்கள். இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன - என்று சட்டசபையில் அ.தி.மு.க. குற்றஞ்சாட்டியுள்ளது.

சட்டசபையில் நேற்றுமுன்தினம் பேசுகையிலேயே அக்கட்சியின் உறுப்பினர் ஜெயக்குமார் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

வடக்கே காசிமேடு மீனவர்கள் ஆந்திராவை சேர்ந்தவர்களாலும், கிழக்கே நாகை, இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கைக் கடற்படையாலும், தெற்கே கன்னியாகுமரி, தூத்துக்குடி மீனவர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்களாலும் தாக்கப்படும் நிலை உள்ளது. மீனவர்கள் வாழ்க்கை போராட்ட வாழ்க்கையாகவே இந்த ஆட்சியில் இருக்கிறது. காணாமல் போன 7 காசிமேடு மீனவர்கள் நிலை என்ன என்றே தெரியவில்லை.

இந்திய எல்லைப் பகுதியில் மீன் பிடிக்கும் மீனவர்களை கூட இலங்கைப் படையினர் தாக்கி வருகிறார்கள். இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன.



தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுப்போம் என்று அரசு உறுதி கூறுகிறதே தவிர, நடவடிக்கை எடுக்கவில்லை. கச்சதீவு 74ஆம் ஆண்டு உங்கள் தி.மு.க. ஆட்சியில் தாரை வார்க்கப்பட்டது. தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக இருந்த அதை மீட்பதற்கு ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இப்போது கச்சதீவில் உயர் கோபுரம் அமைத்து இலங்கைப் படை அமைக்கும்போது இனி தமிழக மீனவர்கள் இந்திய எல்லையில் கூட மீன் பிடிக்க முடியாத நிலை ஏற்படும். மீனவர்களுக்கு ஜி.பி.ஆர்.எஸ். கருவி இலவசமாக வழங்கப்படவில்லை. செய்மதித் தொலைபேசி வழங்கினால் கூட அவர்களுக்கு அரசுடன் தொடர்பு கொள்ளவும் ஒரு பாதுகாப்பான சூழ்நிலை ஏற்படுத்தவும் உத்தரவு இனியாவது தமிழக அரசு விழிப்புடன் இருக்க வேண்டும் - என்றார்.

# கச்சதீவில் இராணுவத் தளம் அமைக்க இலங்கை அரசுக்கு பாக். - சீனா உதவும்

## ராமதாஸ் எச்சரிக்கை

விழுப்புரம், ஜுன் 20

கச்சதீவில் இலங்கை அரசு இராணுவத் தளம் அமைக்க இந்தியாவின் எதிரி நாடுகளான சீனாவும், பாகிஸ்தானும் உதவிசெய்யும். இதை இந்திய அரசு உணர வேண்டும் - பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தைலாபுரத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

சீனாவும் பாகிஸ்தானும் தனது நட்பு நாடுகள் என இலங்கை பகிரங்கமாகக் கூறி வருகிறது. கச்சதீவில் இலங்கை அரசு பாதுகாப்புத் தளம் அமைத்தால் அது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும். இந்தியாவின் எதிரி நாடுகளான சீனாவும், பாகிஸ்தானும் இலங்கை அரசு இராணுவத் தளம் அமைக்க உதவும். இதை இந்தியா உணரவேண்டும்.



கருணாநிதி எப்போதெல்லாம் பதவியில் இருக்கிறாரோ அப்போதெல்லாம் தமிழகத்தின் நலனிலும் தமிழர்களின் நலனிலும் இரட்டை நிலையான போக்கை கையாண்டு வருகிறார். காவிரி, முல்லைப் பெரியாறு பிரச்சினை, இலங்கைத் தமிழர் பிரச்சினை, இராமேஸ்வரம் மீனவர் பிரச்சினை என பலவற்றைக் கூறலாம். மத்திய அரசைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்பதில் கருணாநிதி கவனமாக உள்ளார்.

# சர்வ கட்சிகளும் ஆதரித்தால் கச்சதீவை மீட்கத் தீர்மானம்

## கருணாநிதி உறுதி



சென்னை, ஜுன் 20

கச்சதீவைத் திரும்பப் பெற அனைத்துக் கட்சிகளுக்கு இடையிலும் ஒற்றுமை தேவை. அப்படி ஒற்றுமையாக இருந்து ஆதரவு தெரிவித்தால் பேரவையில் தீர்மானம் கொண்டுவரத் தயார் - என்று உறுதியளித்தார் முதல்வர் கருணாநிதி.

கச்சதீவு விவகாரம் தொடர்பாக பேரவையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்பு தீர்மானத்துக்குப் பதிலளித்து பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்த நாட்டுக்கு கச்சதீவு கொடுக்கப்பட்டுள்ளது. அப்போது மாநிலத்தில் ஆட்சியில் இருந்த தி.மு.க. பெரும் எதிர்ப்பைத் தெரிவித்தது.

சில காரணங்களைச் சொல்லி கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டு விட்டது. அப்படி வழங்கப்பட்ட நேரத்திலும், கச்சதீவிலே மீன் பிடிப்பு, புனிதப் பயணம் செல்லும் உரிமை, மீன் வலைகளைக் காயவைப்பதற்கான உரிமைகள் ஆகியன ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டன.

கச்சதீவுப் பகுதியில் அரங்குகள் அமைத்து, அங்கு வரும் படைகளைக் கண்காணிக்கவும், அங்கிருந்து படைகளைச் செலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும் இலங்கை முயற்சிக்கிறது எனச் செய்திகள் வந்துள்ளன.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்தது.

அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டும் போதே, அது இலங்கையிலே உள்ளவர்களுக்கு இடம் கொடுத்து விடுகின்ற கூட்டமாக அமைந்து விடக் கூடாது. இதற்காகத்தான் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட நான் அஞ்சுகிறேன்.

கச்சதீவு பிரச்சினை தொடர்பாக, பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என பா.ம.கவினர் வலியுறுத்தினர்.

எனவே, அப்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்தால், எதிர்க்கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளும் ஏதாவது சாக்கு போக்குச் சொல்லி வெளிநடப்பு செய்யாமல் ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம் என்ற உறுதிமொழி கிடைத்தால் தீர்மானத்தை கொண்டு வரத்தயார் - என்றார் முதல்வர்.

# நடிகர் சங்கத் தலைவர் பதவிக்கு மீண்டும் போட்டியிடுகிறார் சரத்!



சென்னை, ஜுன் 20

நடிகர் சங்கத் தலைவர் பதவிக்கு சரத்குமார் மீண்டும் போட்டியிடுகிறார்.

தென்னிந்திய நடிகர் சங்கத்துக்கு ஒவ்வொரு 3 ஆண்டுக்கும் புதிய நிர்வாகிகள் தேர்தல் நடக்கிறது. தற்போது சங்கத் தலைவராக சரத்குமார் உள்ளார். அவரது தலைமையிலான நிர்வாகிகள் பதவிக் காலம் முடிவடைவதையொட்டி ஜுலை 12ஆம் திகதி தேர்தல் நடக்கிறது.

சங்கத்தில் 3,500 பேர் உறுப்பினர்கள். இதில் 2,600 பேர் வாக்களிக்க தகுதி பெற்றவர்கள்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்புத் மனு தாக்கல் செய்ய நேற்றுமுன்தினம் கடைசி நாள். தேர்தல் அதிகாரியாக கவிஞர் பிறைசூடன் பொறுப்பேற்றுள்ளார். அவரது முன்னிலையில் போட்டியிடுபவர்கள் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

தலைவர் பதவிக்கு சரத்குமார், பொதுச் செயலாளர் பதவிக்கு ராதா ரவி, துணைத் தலைவர்கள் பதவிக்கு மனோரமா, விஜயகுமார், பொருளாளர் பதவிக்கு வாகை சந்திரசேகர், செயற்குழு உறுப்பினர்கள் பதவிக்கு சத்தியராஜ், முரளி, சார்லி, சின்னி ஜெயந்த், மயில்சாமி, மும்தாஜ் உட்பட 24 பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

# அரசியலில் களமிறங்க தகுந்த நேரத்துக்காக காத்திருக்கிறேன் என்கின்றார் நடிகர் விஜய்

சென்னை, ஜுன் 20

அரசியலுக்கு வருவது பற்றி ஆலோசனை நடத்தியது உண்மைதான். அதற்கான தகுந்த நேரத்துக்காக காத்திருக்கிறேன். ஆனால் இன்னும் முடிவு எடுக்கவில்லை- என்று நடிகர்விஜய் கூறினார்.

இதுபற்றி தமிழக நாளிதழ் ஒன்றுக்கு விஜய் வழங்கிய பேட்டியின் விவரம் வருமாறு -

என் வளர்ச்சிக்கு மிகப்பெரிய காரணம், ரசிகர்கள்தான். அவர்கள் என் மீது மிகுந்த அன்பு வைத்திருக்கிறார்கள். அதன் அடையாளமாக தமிழ்நாடு முழுவதும் 37 ஆயிரம் நற்பணி மன்றங்கள் உள்ளன.

இந்த மன்றங்கள் சார்பில் ரசிகர்கள் நற்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் தகுதிக்கு மீறி, பொதுமக்களுக்கு பல உதவிகளை செய்து வருகிறனர்.

நற்பணி மன்றங்களை, அரசியல் அமைப்பாக மாற்றினால் தமிழ்நாட்டு மக்களுக்கு இன்னும் அதிக அளவில் உதவிகளைச் செய்யலாம் என்பது என் ரசிகர்களின் விருப்பம். இதை என்னிடம் பல முறை சொல்லி வந்தனர். என் வளர்ச்சிக்கு காரணமான ரசிகர்களுக்கும், அவர்களின் எதிர்காலத்துக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்று நீண்டகாலமாக எனக்குள் திட்டமொன்று இருந்தது.

இதுதொடர்பாக ரசிகர்களின் விருப்பத்தை மட்டுமல்லாமல், பொதுமக்களின் கருத்தையும் கேட்டறிய விரும்பினேன். இதற்காக சென்னையிலும், சில மாவட்ட தலைநகரங்களிலும் ஆலோசனைக் கூட்டங்கள் நடந்தன. படித்த இளைஞர்கள், பெண்கள் என பல பிரிவினரிடம் கருத்துக்களை கேட்டு,



என் மூளையில் பதிவு செய்து அதற்கான தகுந்த நேரத்துக்காக காத்திருக்கிறேன்.

எடுத்தேன், கவிழ்த்தேன் என்று உடனடியாக அரசியலில் குதிப்பதிலும், கட்சி தொடங்குவதிலும் எனக்கு உடன்பாடு இல்லை.

இதுதொடர்பாக எனது அப்பா இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகர் அளித்த ஒரு பேட்டியில் -

விஜய் அரசியலுக்கு வருவதை எண்ணி விஜயகாந்த் பயப்படுகிறார் என்று கூறினார் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் அப்படி சொல்லியிருக்க மாட்டார் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. அண்ணன் விஜயகாந்த், என் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர். சினிமாவில் எனக்கு பல உதவிகளைச் செய்தவர். அவர் எங்கே, நான் எங்கே? எங்கோ தப்பு நடந்து இருக்கிறது. அதற்காக நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

# கச்சதீவில் இலங்கையின் இராணுவத் தளம்: தமிழக மீனவரைக் கடத்தி வேலைவாங்கல்!

## பா.ம.க. தெரிவிப்பு

சென்னை, ஜுன் 20

கச்சதீவில் இலங்கைக் கடற்படைத் தளம் அமைக்கப்படுகிறது. இதற்காக தமிழக மீனவர்களைக் கடத்தி வேலை வாங்குகின்றனர் எனத் தகவல்கள் வருகின்றன. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண கச்சதீவை மீட்பதுதான் ஒரே வழி - என்று பா.ம.க. தெரிவித்துள்ளது.

சட்டசபையில் நேற்றுமுன்தினம் கச்சதீவில் இலங்கை அரசு இராணுவத் தளம் அமைப்பது குறித்து ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வந்து உறுப்பினர்கள் பேசினர்.

இந்த தீர்மானத்தில் பேச அனுமதி கொடுக்காததால் ம.தி.மு.கவினர் வெளிநடப்பு செய்தனர்.

இதில் பா.ம.க. சட்டமன்றத் தலைவர் ஜி.கே.மணி பேசியபோதே மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் பேசியவை வருமாறு

தமிழக மீனவர்களை இலங்கை ராணுவம் தொடர்ந்து தாக்கி வருகிறது. இதுவரை 430 மீனவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவதும், கோரிக்கை வைப்பதும், சிறையில் கொடுமைகளை அனுபவித்த பின் மீனவர்கள் விடுவிக்கப்படுவதும் தொடர்ந்து நடக்கின்ற நிகழ்வுகளாகி விட்டன.



கச்சதீவில் இலங்கைக் கடற்படைத்தளம் அமைக்கப்படுகிறது. இதற்காக தமிழக மீனவர்களை கடத்தி வேலை வாங்குகின்றனர் எனத் தகவல்கள் வருகின்றன. இலங்கை அரசு தொடர்ந்து அநீதி அளித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நாம் இலங்கைக்கு உதவி செய்து கொண்டிருக்கிறோம். இலங்கை அரசின் இந்த நடவடிக்கை இந்தியாவுக்கும், தமிழகத்திற்கும் ஆபத்தாக அமையும். இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கச்சதீவை மீட்பதுதான். இதற்காக இந்திய அரசை வலியுறுத்த வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா நலன்புரி முகாம்களில் 12 ஆயிரம் பேருக்கு சின்னமுத்து நோய்

கொழும்பு, ஜூன் 20

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களில் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் சின்னமுத்து தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஐ.நாவின் மனிதாபிமான அலுவலகம் தெரிவித்துள்ளது.

தனது வாராந்த அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ள ஐ.நா. அலுவலகம், மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

ஜூன் 16ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 2 லட்சத்து 85 ஆயிரத்து 18 பேர் மோதல் நடைபெற்ற பகுதிகளிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ளனர்.

இவர்களில் 48 ஆயிரத்து 704 பேர் பல்வேறு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது தவிர, 3 ஆயிரத்து 54 பேர் தற்காலிக முகாம்களிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ளனர். இவர்களில் அநேகமானோர் முதியவர்கள்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான புதிய முகாம்களை அமைக்கும் பணிகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

வவுனியாவில் ஜூன் மாதம் 12ஆம் திகதி வரை 12 ஆயிரத்து 195 பேர் சின்னமுத்து நோய் காரணமாக பாதிக்கப் பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், புதிதாக சின்னமுத்துவின் தாக்கத்திற்குள்ளாகி வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது.

தற்போது 40 முதல் 50 பேரே தினமும் வைத்தியசாலைகளில் சின்னமுத்து பாதிப்பிற்காக சேர்க்கப்படுகின்றனர்.

**கல்லீரல் அழற்சி நோய்**

இதேவேளை, ஜூன் 12ஆம் திகதி வரை 2 ஆயிரத்து 139 பேர் கல்லீரல் அழற்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். கல்லீரல் பாதிப்புக்குள்ளாகி சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் குறையத் தொடங்கியுள்ளது.

வவுனியாவில் இடம்பெயர்ந்தவர்களுக்கான மூன்று புதிய முகாம் பகுதிகளில் மேற்கொண்ட பாதுகாப்பு தங்குமிடம், சுகாதாரம் குறித்த மதிப்பீடுகளின்போது, இப்பகுதிகளில் மழை காலங்களில் வெள்ளம் தங்கும் அபாயம் குறித்து தெரிய வந்துள்ளது.

மேலும் போதிய நீர் வசதிகள் இல்லாததும் புலனாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள முகாம்களில் சுகாதாரப் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

**அனுராதபுரம் சுமதிபுரம் முகாமுக்கு 4,444 பேர் மாற்றப்பட்டனர்**

வவுனியாவில் உள்ள முகாம்களுக்குச் செல்வதற்கான அனுமதி வழங்கப்படுவதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும், சில தாமதங்கள் நிலவுகின்றன.

அநுராதபுரத்திலுள்ள சுமதிபுரம் எனும் பகுதியில் புதிய முகாமொன்று அமைக்கப் பட்டுள்ளது. வவுனியா காமினி மகா வித்தியாலயம் மற்றும் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து 4 ஆயிரத்து 444 பேர் அங்கு மாற்றப்பட்டுள்ளனர். (அ-சி)

## தர்காநகருக்கு அனுமதி பெற்ற யாழ்.மாணவர் விவரம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரியின் காத்திருப்போர் பட்டியலில் இருந்து. யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

**ஆரம்பக்கல்வி**

ரி.பிரின்சியா - அச்சுவேலி தெற்கு, எஸ். மாலதி - பொலிகண்டிமேற்கு, எஸ். பிறேமலதா - கோண்டாவில் மேற்கு, எஸ். நவரத்னம் - மானிப்பாய், கே.சுதர்சிஜினி - சண்டிலிப்பாய், ஆர்.கோபினி- இராசாவின் தோட்டம்.

**மனைப்பொருளியல்**

எஸ்.கஜேந்தினி- அராலி வடக்கு.

## தேர்தல் பணிகளை தொடங்குவதற்காக
# யாழ்ப்பாணம், வவுனியா செல்வதற்கும் அனுமதி கேட்டு நீதி மன்றத்துக்குச் செல்ல ஐ.தே.கட்சி முடிவு

கொழும்பு, ஜூன் 20

யாழ். மற்றும் வவுனியா மாவட்டங்களுக்குச் சென்று தேர்தல் நடவடிக் கைகளில் ஈடுபடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு அனுமதி வழங்குமாறு அரசுக்கு உத்தரவிடக் கோரி அக்கட்சி நீதிமன்றம் செல்ல முடிவெடுத்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் சட்ட ஆலோசனைக் குழு ஆராய்ந்து வருகிறது என அக் கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி. டாக்டர் ஜயலத் ஜயவர்தனவே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து யாழ். மாநகரசபைக்கும் வவுனியா நகரசபைக்கும் அரசு தேர்தலை அறிவித்துள்ளது. இத் தேர்தலில் விரும்பிய கட்சிகள் போட்டியிட முடியும். அதற்கான அச்சமற்ற ஜனநாயக சூழலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

**ஒரு கட்சி மட்டும் போட்டியிடும் நிலை**

துரதிஷ்டவசமாக அந்த மாதிரியான தொரு நிலைமை அங்கில்லை. ஒரு கட்சி மாத்திரம் போட்டியிடும் ஏகாதிபத்திய நிலைமைதான் அங்கு காணப்படுகின்றது.

இத் தேர்தலில் எமது கட்சியில் போட்டியிடுவதற்குத் தேவையான எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையிலானோர் விருப்பம் தெரிவித்துள்ளனர். ஆனால் அதற்கான ஜனநாயக நிலைமை அங்கில்லை.

இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் எம்மால் செல்ல முடியாதுள்ளது. அங்கு செல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை. இந்த அனுமதியை நாம் பல தடவைகள் கோரியுள்ள போதிலும் எது வித பதிலும் எமக்கு வழங்கப்படவில்லை.

மே மாதம் 29ஆம் திகதி இந்த விடயத்தை எமது கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எழுத்துமூலம் தேர்தல் ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

தேர்தல் ஆணையாளர் ஜூன் 2ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயாவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி எமக்கு அனுமதி வழங்குமாறு கோரினார்.

இதனைத் தொடர்ந்து இந்த மாதம் 12ஆம் திகதி இது தொடர்பில் மீண்டும் நான் ஒரு கடிதத்தை தேர்தல்கள் ஆணை யாளருக்கு அனுப்பி வைத்தேன்.

தேர்தல் ஆணையாளர் இந்த மாதம் 15ஆம் திகதி கோத்தபாயாவுக்கு மீண்டும் கடிதம் அனுப்பினார். இந்த மாதம் 16ஆம் திகதி திஸ்ஸ அத்த நாயக்க கோத்தபாயாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார். இவ்வாறு பல கடிதங்கள் அனுப்பியும் எதுவித பதிலும் இதுவரை வழங்கப்படவில்லை.

வேட்பு மனுத் தாக்கல் செய்யும் திகதி முடிவடைவதற்கு இன்னும் ஓரிரு நாள்கள் தான் உள்ளன. இதனால், இது தொடர்பாக நீதி கேட்டு நாம் நீதிமன்றம் செல்லத் திட்ட மிட்டுள்ளோம்.

இது தொடர்பாக ஆராயுமாறு எமது கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எமது கட்சியின் சட்ட ஆலோசனைக் குழுவிடம் கோரியுள்ளார். இதனைத் தொடர்ந்து வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கை யில் சட்ட ஆலோசனைக்குழு ஈடுபட்டுள்ளது - என்றார். (அ-சி)

# கடற்றொழிலாளர் வாழ்வை மேம்படுத்த பல்வேறு உதவிகளை வழங்க ஏற்பாடு

## அமைச்சர் டக்ளஸ் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 20

குடாநாட்டில் மீன்பிடித் தடை நீக்கப் பட்டுள்ளதால், கடற்றொழிலாளர்கள் தமது தொழிலை சீராக மேற்கொள்ள வசதியாக பல்வேறு உதவித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த பல வருடங்கள் நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்த சூழ்நிலைகள் காரணமாக மீன்பிடி தொழிலில் ஈடுபடுவதில் பல்வேறு தடைகளுக்கு முகம்கொடுத்து வந்துள்ள யாழ்.குடாநாட்டு கடற்றொழிலாளர்கள் தங்களது பிரச்சினைகள் தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் தொடர்ந்து முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்படி பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்ததுடன் யாழ்.குடாநாட்டு கடற்றொழிலாளர்களது தொழில்சார் பிரச்சினைகள், நிவாரணங்கள், மீள்குடியேற்றங்கள், தொடர்பில் விரிவான அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்திருந்தார்

இந்த நிலையில் அவ்வப்போது ஒரு சில தடைகள் பாதுகாப்பு நிலைமையை உறுதிப்படுத்தி நீடிக்கப்பட்டுவந்தன.

தற்போது புலிகளுடனான யுத்தம் முடிவுற்ற நிலையில் மீண்டும் இம் மக்களது பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொண்டுவந்ததன் பிரகாரம் யாழ். குடாநாட்டில் செயற்பட்டு வருகின்ற அனைத்து மீனவ சங்கங்கள் மற்றும் சமாசத்தின் பிரதிநிதிகள் பங்கேற்ற உயர்மட்ட மாநாடொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் காரைநகரில் நடைபெற்றது.

இம் மாநாட்டின் போது ஒவ்வொரு மீனவர் சங்கத்தினதும் பிரதிநிதிகள் தங்கள் தொழில்சார் பிரச்சினைகளை முன்வைத்ததையடுத்து ஜனாதிபதி அவர்களின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ இப் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டினூடாக தீர்வுகளை முன்வைத்தார்.

யாழ். குடாநாட்டில் இடம்பெயர்ந்துள்ள மக்களைக் கூடிய விரைவில் சொந்த இடத்தில் குடியமர்த்தவும்அவர்கள் கடற்றொழிலில் ஈடுபட வசதிகளை செய்து தருவதாகவும் உறுதியளிக்கப்பட்டது.

சுனாமி, புயல் மற்றும் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்கள் தங்களது படகுகளை திருத்திக் கொள்வதற்கும் வலை மற்றும் மீன்பிடி உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ்225 மில்லியன் ரூபாவும் கடற்றொழில் நீரியல் வள அமைச்சின் கீழ் 76 மில்லியன் ரூபாவும் என 301 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படுவதாகவும் உறுதியளிக்கப்பட்டது.

குடாநாட்டு கடற்றொழிலாளர்களின் உற்பத்திகளை ஏ-9 பாதையூடாக தென் பகுதிக்குக் கொண்டு செல்வதற்கு குளிரூட்டி வசதி கொண்ட இரு நீள் பாரவூர்திகள் பயன்படுத்தப்படும் என்றும் இப் பாரவூர்திகள் கடற்றொழிலாளர்களின் பகுதிகளுக்கே நேரில் வந்து பிரதானமான ஓர் இடத்தில் இருந்து உற்பத்திகளைக் கொள்வனவு செய்யும் என்றும் தீர்மானிக்கப்பட்டதும், குடாநாட்டின் கடல் உற்பத்திப் பொருள்களை கூடிய மட்டிலும் அதிகரித்து தென்பகுதிக்கு வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டதுடன் குளிர்சாதன வசதிகளைக் கொண்ட தொழிற்சாலைகளை அமைத்துக் கொள்ள முன்வரும் சங்கங்களுக்கு கடன் உதவிகள் செய்து தரப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இம் மாநாட்டின் இறுதியில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தொடர்ந்து எமது கடற்றொழில் சார்ந்த மக்கள் தன்னிடம் முன்வைத்து வந்துள்ள பல்வேறு கோரிக்கைகள் முதற்கட்டமாக இங்கு நிறைவேற்றப்பட்டுள்ளதாக கூறியதுடன் இந்த நிலையில் எமது மக்களுக்குக் கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்தி அநாவசிய பிரச்சினைகள் வர அனுமதிக்காமல் தங்களது தொழில் முயற்சிகளைநல்ல முறையில் மேற்கொள்ளும்படி கேட்டுக் கொண்டதுடன் எதிர்காலத்தில் இன்னும் பயனுள்ள சலுகைகளைப் பெற்று எமது தொழில் துறையை முன்னேற்ற முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இங்கு உரை நிகழத்திய பசில் ராஜபக்ஷ ஜனாதிபதியிடமும் அரசிடமும் யாழ் குடாநாட்டு மக்களது தொழில் சார்ந்த பிரச்சினைகள் குறித்து தொடர்ந்து பல கோரிக்கைகளை முன்வைத்து அவற்றில் இன்று அதிகக் கோரிக்கையை உங்களுக்கா வென்றெடுத்துத் தந்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு குடாநாட்டு கடற்தொழிலாளர்கள் நன்றி தெரிவிக்க வேண் டும் எனக் கேட்டுக் கொண்டார்- என்றுள்ளது (1)

## ஜனாதிபதித் தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வது ஜனாதிபதிப் பதவிக் காலத்தை ஆரம்பித்துள்ள மஹிந்த ராஜபக்ஷ 2011 ஆம் ஆண்டு நவம்பர் வரை ஆறு ஆண்டுகளுக்கு இந்தப் பதவியில் தொடரமுடியும்.

எனினும் அரசமைப்புத் திருத்தச் சட்ட ஏற்பாடுகளின்படி தமது முதலாவது பதவிக் காலத்தில் நான்கு ஆண்டுகள் நிறைவு செய்த பின்னர், எஞ்சியுள்ள இரண்டு வருட காலத்துக்குள் தாம் விரும்பிய நேரத்தில் முற்கூட்டியே அவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும்.

அத்தகையவாறு, முற்கூட்டியே அவர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினாலும், அதில் அவர் வெற்றிபெறுவாராயின், தமது முதலாவது பதவிக் காலத்தின் எஞ்சிய பகுதிக்குத் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருந்து விட்டு அது முடிந்ததும், தமது அடுத்த வெற்றி மூலம் கிட்டிய இரண்டாவது ஆறு ஆண்டுகளுக்கான பதவிக்காலத்தை அதிலிருந்து அவர் தொடரமுடியும்.

ஆனால் முற்கூட்டியே அவர் நடத்தத் திட்டமிடும் தேர்தலில் அவர் தோற்பாராயின் அவரின் முதலாவது பதவிக்காலம் அந்த முற்கூட்டியே நடத்தப்படும் தேர்தலின் முடிவு அறிவிக்கப்பட்டதோடு முடிவுக்கு வந்துவிடும். - [illegible] ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பான அரசமைப்புச் சட்ட விதியாகும்.

விரைந்து ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை இப்போது நடத்தினால் நாட்டில் தமக்கு மிகுந்துள்ள செல்வாக்கு மற்றும் ஆதரவு மூலம் சுலபமாகத் தாம் அதில் வெற்றியீட்ட முடியும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எண்ணுகின்றார் என்று அவருடன்தொடர்புடைய வட்டாரங்கள் கூறுகின்றன.

எனினும், தமது முதலாவது பதவிக் காலத்தில் நான்கு ஆண்டுகளைப் பூர்த்தி செய்த பின்னரே முற்கூட்டிய தேர்தலுக்கான அறிவிப்பை அவர் விடுக்க முடியும் என்பதால் இந்த ஆண்டு நவம்பர் வரை அவர் அதற்குக் காத்திருக்க வேண்டும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

**2010ஜனவரி அல்லது பெப்ரவரியில்தேர்தல்**

அதன்படி இந்த ஆண்டு நவம்பர் இறுதியில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை - பிரகடனத்தை - அவர் வெளியிட்டாலும், வேட்பு மனுக்கள் கோரி, பிரசாரக் காலத்துக்கு இடமளித்து, தேர்தலை அடுத்த ஆண்டு முற்பகுதியிலேயே நடத்தக் கூடியதாக இருக்கும்.

எனவே, அடுத்த ஆண்டு ஜனவரி அல்லது பெப்ரவரியில் அத் தேர்தல் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

[illegible] வெற்றி பெற்றாலும், [illegible] பதவிக் காலத்தை 2011 நவம்பர் வரை தொடர்ந்து, அதைப் பூர்த்தி செய்வது என்றும் -

அதன் பின் இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல் வெற்றி மூலம் தமக்குக் கிடைக்கும் பதவியை 2011 நவம்பரில் சத்தியப்பிரமாணம் செய்து ஏற்பதன் மூலம் 2017ஆம் ஆண்டு வரை வகிப்பது என்றும் -

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டிருக்கின்றார் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் கூறுகின்றன.

இச் செயற்பாடு மூலம் அடுத்த எட்டு ஆண்டுகளுக்குத் தாம் பதவியில் இருப்பதை உறுதிப்படுத்த அவர் தயாராகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

**செப்ரெம்பரில் அறிவிப்பு வரலாம்**

இதேவேளை, தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு ஏப்ரல் வரை உள்ளதால் அதை அப்படியே தொடர விட்டு விட்டு அடுத்த ஆண்டு முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலையும், அதன் பின் அடுத்த வருடத்தின் முதல் காலாண்டின் முடிவில் பொதுத் தேர்தலையும் நடத்த ஜனாதி பதி எண்ணம் கொண்டிருக்கின்றார் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த சம்மேளனக் கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பரில் நடக்கவிருக்கின்றது. அக் கூட்டத்தில் வைத்து முற்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது பற்றிய முடிவையும், அதன் பின்னர் பொதுத் தேர்தல் நடத்தலாம் என்ற திட்டத்தையும் சம்மேளனத் தீர்மானமாக எடுத்து வெளியிட ஜனாதிபதி விரும்புகின்றார் என்றும் கூறப்பட்டது.(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வணங்கா மண்' கப்பல் பொருள்கள் தமிழருக்கு கிடைக்க இந்தியா வழி செய்யவேண்டும் என்கிறார் கலைஞர்

## கடிதம் மூலம் அவர் கிருஷ்ணாவுக்கு வேண்டுகோள்

சென்னை, ஜூன் 20

'வணங்கா மண்' கப்பலில் உள்ள உதவிப் பொருள்கள் ஈழத்தமிழர்களின் கைகளில் முழுமையாகக் கிடைக்க இந்தியா வழி வகைசெய்யவேண்டும் - என்று தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுக்குக் கடிதம் மூலம் கலைஞர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:-

இலங்கையில் உணவு கிடைக்காமல் தவித்த தமிழர்களுக்கு உதவ ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள் அனுப்பி வைத்த உதவிப்பொருள்கள் கொண்ட கப்டன் அலி (வணங்கா மண்) கப்பலை இலங்கைக் கடற்படை திருப்பிவிட்டது. அந்தக் கப்பலில் 884 தொன் உணவு, மருந்து மற்றும் உதவிப்பொருள்கள் இருக்கின்றன எனக் கூறப்படுகிறது.

உலகில் புலம்பெயர்ந்து தவிப்பவர்களுக்கு உதவ, மனிதாபிமான அடிப்படையில் தேவையான பொருள்களை சர்வதேச சமூகம் கொடுப்பது வழக்கமான ஒன்றுதான்.

எனவே, இந்த நேரத்தில் இது தொடர்பாக இந்திய அரசு தலையிடுவது பொருத்தமானதாக, சரியான நேரத்தில் உதவுவதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். கப்டன் அலி கப்பலில் உள்ள உதவிப் பொருள்களை இலங்கையில் இறக்க அந்த நாட்டை இந்தியா சம்மதிக்க வைக்க வேண்டும். மேலும் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச அமைப்புகள் கண்காணிப்பில் அந்த உதவிப்பொருள்களை ஈழத்தமிழர்களுக்குக் கிடைக்கப் பரிந்துரை செய்யவேண்டும்.

மனிதாபிமான அடிப்படையில் இந்த உதவியை இந்தியா செய்யும் என்று நான் நம்புகிறேன். இந்த விடயத்தில் நீங்கள் தலையிட்டு, சரியான நடவடிக்கை எடுத்தால் நான் நன்றியுடையவனாக இருப்பேன் - என்றுள்ளது. (சி)

# கைதடி வீதியில் சென்றவர்களை குளவி கொட்டியது; எழுபேர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூன் 20

கைதடியில் வீதியில் சென்றோரை கருங்குளவிகள் கொட்டியதில் நான்கு மாணவர்கள் உட்பட ஏழுபேர் மயக்கமுற்ற நிலையில் நேற்றுக் காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

குளுவிகள் கொட்டியதில் மாணவர்களான கே.வினோகரன் (வயது 15), சி.ரஜீவன் (வ்யது 15), கே. தினேஸ்ரூபன் (வயது 19), கே.ரவீந்திரன் (வயது 19) மற்றும் ஏ.துஷாந்தினி(வயது 23), கே.மேகலா (வயது 26), ரி.அனுசியா(வயது 24) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவார். (6-25)

# பாகிஸ்தான் இலங்கை நாளை பலப்பரீட்சை

லண்டன், ஜூன் 20

ஐ.சி.சி. ருவென்ரி - 20 உலகக்கிண்ணப் போட்டித் தொடரில் டில்சானின் அதிரடியாலும் மத்தியூஸ், முரளிதரன் ஆகியோரின் அசத்தலான பந்து வீச்சாலும் மேற்கிந்தியத் தீவுகளை 57 ஓட்டங்களால் வீழ்த்தி இறுதிப் பொட்டிக்குள் நுழைந்தது இலங்கையணி.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்தது இதனால் முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இலங்கையின் தொடக்க ஆட்டக்காரர்களாக டில்சானும் சனத் ஜெயசூரியாவும் களமிறங்கினர்.

ஆரம்ப வீரராகக் களமிறங்கிய டில்சான் இப்போட்டியிலும் தன்னுடைய அதிரடியான துடுப்பாட்டத்தைத் தொடர்ந்தார். ஆட்டமிழக்காமல் 57 பந்துகளுக்கு முகங்கொடுத்து 12 பௌண்டறிகள், 2சிக்ஸர்கள் அடங்கலாக 96 ஓட்டங்களைப் பெற்றார். (இந்த ஓட்டங்களே இரண்டாவது ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தெடரில் பெறப்பட்ட அதிகூடுதலான ஓட்ட எண்ணிக்கையாகும்).

சனத் ஜெயசூரியா 37 பந்துகளை எதிர்கொண்டு 24 ஓட்டங்களையே பெற்றார். அணித் தலைவர் சங்கக்கார ஓட்டமெதனையும் பெறாத நிலையில் வெளியெற ஜெயவர்த்தனாவும் 2 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

நான்காவது விக்கெட்டுக்காக டில்சானுடன் ஜோடி சேர்ந்த சமரசில்வா 11 ஓட்டங்களைப் பெற்றபோது. பென்னின் பந்தில் ராம்டின்னிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க அடுத்து வந்த முபாரக் (7) ரெயிலரின் பந்தில் சமியிடம் பிடிகொடுத்து பெவிலியன் திரும்பினார்.

தனித்து நின்று போராடிய டில்சானுடன் ஜோடிசேர்ந்த மத்தியூஸ் 12 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற 20 ஓவர்களும் நிறைவடைந்தன.

ஆட்டமிழக்காமல் 96 ஓட்டங்களைப் பெற்ற டில்சான் இப்போட்டியில் முதலில் சதமடிக்கும் வாய்ப்பினை 4 ஓட்டங்களினால் தவறவிட்டார். 20 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் பந்து வீசிய பிராவோ 2 விக்கெட்டுக்களையும் போலார்ட், கெய்ல்,ரெய்லர் ஆகியயோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

159 ஓட்டங்கனைளப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் மத்தியூஸ் வீசிய முதலாவது ஓவரிலேயே மார்ஷல், பிராவோ, சைமன்ஸ் ஆகிய முக்கிய வீரர்களை ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் இழந்து தவித்தது. ஆனால் பொறுப்புடன் ஆடிய கிறிஸ்கெய்ல் ஆட்டமிழக்காமல் 8 பௌண்டறிகள் 2 சிக்ஸர்களுடன் 63 ஓட்டங்களைப் பெற்றார்.

சந்தர்போல், சர்வாண், பொலர்ட் ஆகியோர் முறையே 7, 5, 3 என செற்ப ஓட்டங்களுடன் வெளியேறினர். அடுத்து வந்த வீரர்களும் சோபிக்காத நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் 102 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இலங்கை அணி சார்பில் பந்து வீசிய மத்தியூஸ், முரளிதரன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் மெண்டிஸ் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் ஏற்கனவே தெரிவான பாகிஸ்தானு டன், இலங்கை அணி நாளை இறுதிப் போட்டியில் மோதவிருக்கின்றது. (6)

# நெடுந்தீவுக்கான..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரைநகரில் நேற்று இடம்பெற்ற வடக்கின் வசந்தம் விசேட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு போக்குவரத்துக்கு 150 மில்லியன் ரூபா செலவில் படகு ஒன்றை வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணத்து உற்பத்திப் பொருள்கள் தங்குதடையின்றி எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்படும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (1-20)

# குடா நாட்டின் கடற்பிரதேசத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்றுக் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற கூட்டம் சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் நீரியல் வளத்துறை பிரதி அமைச்சர் நிமால் பெரேரா, தேசிய சுதந்திதர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீர வன்ஸ, யாழ்ப்பாண அரச அதிபர் கே.கணேஷ், கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரணகொட, வட பிரதேசத்துக்குப் பொறுப்பான கடற்படைக் கட்டளை அதிகாரி ரியர் அட்மிரல் சோமதிலக திஸாநாயக்க, யாழ். கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் மென்டக்கு சமரசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

பருத்தித்துறை, வேலணை, புங்குடுதீவு, மண்டைதீவு, காரைநகர், நயினாதீவு, நெடுந்தீவு, குருநகர், வலிகாமம் ஆகிய மீனவக் கிராமங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான மீனவர்களும் இந்த நிகழ்வில் பங்கு பற்றினர்.

யாழ்.குடாநாட்டின் ஆழ்கடல் பிரதேசத்தில் மீனவர்கள் மீன் பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு விதிக்கப்பட்டிருந்த 2 மீற்றர்கள் வரை எல்லை வகுக்கப்பட்டிருந்த தடையும் நீக்கப்படுவதாக கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

பிடிக்கும் மீன் வகைகளைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான குளிரூட்டி அறைகளை அமைப்பதற்காக மீனவ சங்கங்களுக்குகடன்வசதிகள்வழங்கப்படவுள்ளதோடு, கிழக்கு மாகாணத்தின் பயன் பாட்டுக்காக அனுப்பப்பட்டுள்ள குளிர்சா தன இயந்திரங்கள் உள்ளடங்கும், களஞ் சியப்படுத்தும் கொள்கலன்கள் இரண்டு உடனடியாக குடாநாட்டிற்கு எடுத்து வந்து பொருத்தப்படும்.

கடலுணவுகளை கொழும்புக் கொண்டு செல்வதற்கு ஏ-9 வீதி திறந்துவிடப்பட விருப்பதோடு, பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு சீல் வைக்கப்பட்ட லொறிகள் மூலமாக ஏ-9 வீதியூடாக அவை கொழும்புக்கு கொண்டு செல்லப்படுவதற்கு அனுமதி யளிக்கப்படும்.

மீனவர்களுக்கு தேவைப்படும் நங்கூரமிடும் நிலைகள் நிறுவப்படுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதோடு, அதற்கான பொறுப்பு மீன்பிடி அமைச்சிடம் கையளிக்கப்படும்.

* காங்கேசன்துறை துறைமுகச் சுற்றாடலில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் நீக்கப்படுவதோடு, துறைமுகப் பாதுகாப்புப் பிரதேசமான வரையறுக்கப்பட்ட கடற்பிரதேசம் தவிர்ந்த ஏனைய கடற்பிரதேசங்களில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியும்.

* மண்டைதீவுக்கான மின்சார விநியோகம், தொலைபேசிச் சேவை, போக்குவரத்து வீதிகள் போன்ற அடிப்படை வசதிகளும் விரைந்து வழங்கப்படும்.

* யாழ். குடாநாட்டில் வசித்த - தற்போது வவுனியா நிவாரணக் கிராமங்களில் - வாழ்ந்துவரும் மக்கள் விரைவில் மீளக் குடியமர்த்தப்படுவதோடு, ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் உள்ள நிலக்கண்ணிகள் விரைந்து அகற்றப்பட்டு அப்பிரதேசங்களிலும் கூடிய விரைவில் மக்கள் குடியமர்த்தப்படவுள்ளனர் -என்றும் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார். (அ-20-111)

# 24 மணி நேர..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், மின்சார சபையின் வட பிரதேச பொது முகாமையாளர் எஸ்,முத்துரத்தினானந்தம் மற்றும் மின்சாரசபை அதிகாரிகள், ஊழியர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சுன்னாகம் மின் நிலையத்தில் சீனாவின் 'நொதேன் பவர்' நிறுவனத்தால் அமைக் கப்பட்டு வரும் மின் நிலையத்தையும் அமைச்சர்கள் குழு பார்வையிட்டது. (அ-1)

# வடக்கு, கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த இராணுவ முகாம்கள் அமைக்கப்படவுள்ளன என்றும், குறித்த பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் சுமார் 21 புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் புதிய இராணுவ முகாம்களையோ அல்லது பொலிஸ் நிலையங்களை அமைக்க வேண்டாம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும் அரசு இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத்தவிர படையினரின் எண்ணிக்கையை மேலும் ஒரு இலட்சத்தால் அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது. (சி)

# கடற்றொழிலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினரால் அவ்வப் பகுதிகளில் தீர்மானிக்கப்படுகின்ற ஒரிடத்தில் இருந்து கடலுக்குச் சென்று மீண்டும் அதே இடத்தில் கரையேற வேண்டும்.

* இரவு வேளைகளில் மீன்பிடிக்கச் செல்வோர் இருட்டுவதற்கு முன்பாக அந்த இடத்திற்கு வந்து சேர வேண்டும். அதே போன்று கடலுக்குச் சென்று மறுநாள் காலை வெளிச்சம் வந்ததன் பின்னரே அவ் விடத்தின் ஊடாக கரையேற வேண்டும்.

* இதுவரையில் வாரத்தில் குறைந்த நாள்கள் மட்டுமே கடல் தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலைமாறி வாரத்தில் 7 நாள்களும் தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

* ஆழ்கடல் பகுதியில் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கைக் கடற்பரப்பைத் தாண்டி அப்பால் செல்ல வேண்டாம் எனக் கேட்கப்பட்டுள்ளது.

* இதுவரை 9 குதிரை வலுவுடைய வெளி இணைப்பு இயந்திரப்படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. தற்போது அது 15 குதிரை வலுவுடைய வெளி இணைப்பு படகினை உபயோகிப்பதற் கான அனுமதி வரை நீடிக்கப்பட்டுள்ளதும் எதிர்காலத்தில் தொழில் நிலை கருதி 25 குதிரை வலுவுடைய வெளி இணைப்பு இயந்திரப் படகுவரை இந்த அனுமதி நீடிக்கப்படுமெனத்தெரிவிக்கப்பட் டுள்ளது.

* பண்ணைப் பாலப் பகுதியில் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப் பட் டுள்ளது. (அ-1-20-111)

# உணவு மற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுராதபுரம் சி.டபிள்யூ ஈ. நிறுவனத்தில் வைத்து சோதனைகள் செய்யப்பட்ட பின்னர் இந்த லொறிகள் படையினரின் வழித்துணையுடன் ஏ-9 வீதி ஊடாக வந்து சேர்ந்தன.

நாவற்குளிக் களஞ்சியத்தில் பதிவுகளை மேற்கொண்ட பின்னர் பொருள்களை இறக்குவதற்காக அவை யாழ்ப்பாணத் துக்கு அனுப்பப்பட்டன.

இந்த லொறிகளில் நகரை அண்டிய பகுதியைச் சேர்ந்தவற்றை இன்று காலை 9 மணிக்கும் நகருக்கு வெளியே சென்ற லொறிகளை காலை 10 மணிக்கும் வரு மாறு நாவற்குளி களஞ்சிய அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களும் தொலைக் காட்சிப் பெட்டிகள், மின்சார உபகரணங்கள், ரயர்கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் என்பன லொறிகளில் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதேவேளை -

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நாவற்குளி களஞ்சியத்துக்கு வந்து சேர்ந்த தனியார் வர்த்தகர்களின் 33 லொறிகளும் பொருள்களை இறக்கி முடிந்த பின்னர் நேற்று மாலை களஞ்சியத்தைச் சென்றடைந்தன.

லொறிகளில் எடுத்துவரப்பட்ட கோதுமை மா, சீனி, உருளைக்கிழங்கு மற்றும் நானாவிதப் பொருள்கள் நேற்று சந்தையில் விற்பனை செய்யப்பட்டன.

நாவற்குளியில் வைத்து இந்த லொறிகளில் வெங்காயம், புகையிலை, கடலுணவு ஆகிய உள்ளூர் உற்பத்திகள் நேற்று ஏற்றப்பட்டன. அவை இன்று காலை கொழும்புக்கு புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# வெள்ளவத்தையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்தினம் பொலிஸார் மேற்கொண்டனர் என வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மங்கள தெஹிதெனிய தெரிவித்தார்.

தமது அடையாளங்கள் மற்றும் பதிவுகளை நிரூபிக்கத் தவறியவர்களையே இவ்வாறு கைது செய்தனர் என அவர் மேலும் கூறினார். (சி)

LAVA HOSPITAL

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333

ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வு கூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற.

Basic Body Check up

'அடிப்படை உடற் பரிசோதனைகள்'

★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான

Obesity package - 1200/=

## மரண அறிவித்தல்

### தம்பியன் கதிரவேலு

கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியன் கதிரவேலு நேற்று (19.06.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பவளத்தின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2009) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

கைதடி தெற்கு, கைதடி.

T.P. 0214590813

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org